1395

d by the Text-Book Committee, Madras.

நல்லொழுக்க போத வர்க்கம்.

நீதிவாக்கியக் கதைகள்.

வெற்றிவேற்கை.

தஞ்சைமாநகரம்,

எஸ். வி. இராமஸ்வாமி ஐயங்கார்.

E. M. GOPALAKRISHNA KONE,

MADURA.

1927. [Price 3 As.

PRESS, MADURA.

TS
031,6
N27
176827

சிவிக்ஸ், துரைத்தன விளக்கம் என்னும்

இராஜாங்கமுறை நூல்.

நேச்சர்ஸ்டடி அல்லது இயற்கைப்பொருட்பாடம்.

E. கோவிந்தசாமி ராவ் அவர்கள் எழுதியவை.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

மாணவர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் மிகவும் அவசியமானவை.

எலிமெண்டரி பாடசாலைகளின் பாடமாக ஏற்பட்டுள்ள (சிவிக்ஸ்) துரைத்தன விளக்கம் என்னும் இராஜாங்க முறைநூல், இயற்கைப் பொருட்பாட சம்பந்தமான புத்தகங்கள் அநேகம் ஏற்பட்டிருப்பினும்; அவையாவும் நுண்ணறி வுடையோரன்றி ஏனையோர் அதன் விஷயங்களை நன்குணர்த லரிதாயிருப்பது பற்றியும், உபாத்தியாயர்கள் மாணவர்கட்குப் போதிக்கும் சிரமம் பெரிதாயிருப்பது பற்றியும் உபாத்தியாயர்கட்குச் சிரமமின்றி மாணவர்கள் இப்புத்தகத்தைப் படித்த மாத்திரத்தில் இலகுவாய் விஷயங்கள் தெரியும் வண்ணம் பரீக்ஷாதிகாரிகளின் வினாக்களை யனுசரித்தே இனிய எளிய தமிழ்நடையில் எழுதி வெளிப்படுத்தியிருக்கின்றோம். இதனைக் கண்ணுற்ற நண்பர்கள் கைவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம். தனித்தனி விலை அணா 4.

தமிழ் அச்சுக்காப்பிப் புஸ்தகங்கள்.

A. நாராயணசாமி ஆச்சாரியார் செய்தது.

1 கிர். காப்பி, 2 கிர். காப்பி, 3 கிர். காப்பி, ஷை A காப்பி 4 கிர். காப்பி, 5 கிர். காப்பி. தனித்தனி விலை அணா 1

செய்யுட் பாடப் புத்தகங்கள்.

உலகநீதி மூலமும் உரையும்	பை 9
ஆத்திசூடி மூலமும் உரையும்	பை 9
கொன்றை வேந்தன் மூலமும் உரையும்	பை 9
வெற்றி வேற்கை மூலமும் உரையும்	பை 9
மூதுரை அல்லது வாக்குண்டாம் உரையுடன் ...	அணா 1
நன்னெறி மூலமும் உரையும்	அணா $1\frac{1}{2}$

இவை மூலச்செய்யுள்கட் கேற்ற பதவுரையும், கருத்துரையும் இலக்கணக் குறிப்பும் பாடசாலைச் சிறுவர்கட்கு ஏற்றவாறு இலகுவான நடையில் எழுதப்பெற்றுள்ளன.

நல்லொழுக்க போதவர்க்கம்.

நீதிவாக்கியக் கதைகள்.

வெற்றிவேற்கை.

தஞ்சைமாநகரம்,
எஸ். வி. இராமஸ்வாமி ஐயங்கார்.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

1927.

பதிமூன்றாம் பதிப்பு.

Copy Right Red] [Price 3 As.

முகவுரை.

பிள்ளைப்பாண்டியன் பேழமலரடியிணை
உள்ளத்துள்குது முயர்வுறும்பொருட்டே.

"வெற்றிவேற்கை" என்னும் பெயரிய இந்நூல் இற்றைக்கு நானூறு ஆண்டுகட்கு முன்னம் பாண்டிய நாட்டைச்சார்ந்த கொற்கை என்னும் பதியை அரசாண்டுவந்த "அதிவீரராம பாண்டியன்" என்பவரால் அருளிச்செய்யப் பெற்றதாமென்ப. இவர் பாண்டிய வம்சத்திற் பிறந்து, புவியரசாயிருந்து, செங்கோன் முறை வழுவாது நீதி செலுத்தி வந்ததுமன்றி, நந்தமிழ்நாட்டெல்லைக்கோர் கவியரசாயுமிருந்து, "அறம், பொருள், இன்பம், வீடு" என்னும் புருடார்த்தம் நான்கையும் பயக்கவல்ல பல காப்பியங்களியற்றிச் "செந்தமிழ் நாடு மகிழ்ச்சியிற் குளித்துய்யச் செய்துளார்" என்பது ஒரு மலையிலக்கேயாம். இந்நூல் நறுந்தொகை எனவும் பெயர் பெற்று, நந்தமிழ்நாட்டு மக்களுக்கு நீதி விஷயங்களை இலகுவிற் போதிக்கத்தக்க எளிய நடை வாக்கியங்களாயிருப்பதால் எத்துணைக் கல்வி கற்றாராயினும் தாம் சிறுப்ப வயதிற் கற்ற இவ் வாக்கியங்கள் அத்துணையும் தம்மால் ஆதரவோடு போற்றி வரப்பெற்று, நம் பள்ளிக்கூடமாணவச் சிறுவர்களுக்கும் மிக்கு அத்தியாவசியப்பட்டு, அவர்கள் முயன்று கல்வி கற்பதற்கு ஒரு வழிகாட்டியாயு மிருக்கிறது.

மேனாட்டாருங்கூட இவ்வாக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பித்துத் தாம் செலுத்துகின்ற நீதிமுறையில் உபயோகப்படுத்துகின்ற ஒன்றினாலேயே கற்றோர்க்கும், அரிவரி கல்லார்க்கும் இதன் பெருமை நன்கு விளங்குமென்ப.

இங்ஙனம்,
நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான்,
மதுரை.

12687
-600 008.

பொருளடக்கம்.

பக்கம்

நீதிவாக்கியக் கதைகள். 5

1. வித்தை கற்பிப்பவர் குரு ஆவர்.
[ஏகலைவன் சரிதம்.] 11

2. சொல்வதைத் திருத்தமாய்ச் சொல்ல வேண்டும். [கும்பகர்ணன் சரிதம்.] 13

3. உறவினருக்கு உதவுதல் செல்வர்க் கழகு.
[தனபால செட்டியார் சரிதம்.] 14

4 ஒழுக்கத்தைப் பிராமணர் கைவிடலாகாது.
[ஆனந்தன் சரிதம்.] 16

5. நீதி தவறாமல் ஆளுதல் அரசனுக்கு அழகு.
[காவேரி கரைகண்ட சோழன்.] 18

6. பொருளை விருத்திசெய்ய வேண்டும்.
[தனசேகரன் சரிதம்.] 20

7. உழுது பயிரிடுவதின் பெருமை.
[குணசேகரனும், குடியானவனும்.] 21

8. மந்திரிக்கு இன்னது அழகு.
[விபீஷணன் சரிதம்.] 23

9. போர்வீரன் இலக்ஷணம்.
[மலைவீரன் சரிதம்.] 24

10. பிறருக்கு அன்னமிட்டு, உண்ணவேண்டும்.
[இளையான் குடிமாறன் சரிதம்.] 26

11. புருஷனுடன் எதிர்த்து உரையாடலாகாது.
[சண்டிகை சரிதம்.] 27

12. பதிவிரதையின் சிறப்பு.
[நளாயினி சரிதம்.] 30

13. அடக்கமே மேலானது.
[சேரமாண்டார் சரிதம்.] 32

14. ஏழைகள் கொள்ளவேண்டிய முறை.
[ஹரிச்சந்திரன் சரிதம்.] 34

15. உருவத்தை எண்ணி மலைக்கலாகாது.
[இரண்டுவித்வான்கள் சரிதம்.] 35
16. பிள்ளைகளின் இலக்ஷணம்.
[இரண்டுசேகோதரிகளின் சரிதம்.] 39
17. பெண்சாதியின் இலக்ஷணம்.
[திருவள்ளுவர் மனைவி சரிதம்.] 40
18. இயற்கையான நல்ல குணம் மாறாது.
[குமணன் சரிதம்.] 42
19. இயற்கையான கெட்டகுணம் மாறாது.
[நாயின்போக்கு.] 44
20. பெரியோர் நட்பு.
[ஹநுமத் ஸமேத ஸ்ரீராமர் சரிதம்] 45
21. மூர்க்கர் நட்பு.
[துரியோதனன் சரிதம்] 47
22. பெருங்குற்றம் செய்யலாகாது.
[சுகந்தனும், அவன் மகனும்.] 48
23. பெருமைக்கு மூலம் இன்னது.
[இரண்டு ராஜகுமாரர்கள் சரிதம்.] 50
24. சற்பது கடமை.
[சாப்பாட்ரோமன் இராமகவி ஆனது.] 51
25. கல்வியின் பெருமையே பெருமை.
[அழகன் சரிதம்] 53
26. குலத்திலும் கல்வி மேலானது.
[திருவள்ளுவர் சரிதம். 54
27. அறிவுள்ளவன் பெருமை.
[உருத்திரசன்மன் சரிதம்.] 55

நீதிவாக்கியங்கள்.

வெற்றி வேற்கை.

சிறப்புப் பாயிரம்.

வேற்றிவேற்கை வீர ராமன்
கோற்கை யாளி குலசேகரன் புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தோகை தன்னால்
குற்றம் களைவோர் குறைவிலா தவரே.

[இன்னார் குரு ஆவர்]

1. எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்.

[இன்னவை இன்னவற்றிற்கு அழகு.]

2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.
5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
6. வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்
7. உழவோர்க் கழகிங் குழுதூண் விரும்பல்.
8. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
9. தந்திரிக் கழகு தருக ணாண்மை.
10. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
11. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
12. குலமகட்கழகுதன்கொழுநனைப்பே ணுதல்.

13. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
14. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.

[தோற்றத்தைக் கண்டு மலைக்கலாகாது.]

15. தேம்படு பனையின் திரள்பழத்தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

16. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.
உற்றோ ரெல்லா முறவின ரல்லர்.

17. கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.

[இயற்கைக குணம் மாறாது.]

18. அடினு மாவின்பால் தன்சுவை குன்றாது.
சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது.
அரைக்கினுஞ் சந்தனம் தன்மணமறாது.
புகைக்கினுங்காரகில்பொல்லாங்குகமழாது
கலக்கினுந் தண்கடல் சேறா காது.

19. அடினும் பால்பெய்து கைப்பருது பேய்ச்
[சுரைக்காய்.
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாதே.

20. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க் கும்மே.

21. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

[பெருமை, சிறுமை பிறக்கு மிடம்.]

22. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெருயோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

23. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

[கல்வியின் சிறப்பு.]

24. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே

25. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னயிற் கீழிருப் பவனே.

26. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியில் கற்றோரை வருக வென்பர்.

27. அறிவுடையொருவனை அரசனும்விரும்பும்.

28, அச்சமுள் ளடக்கும் அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.

[இன்னவை இன்னவற்றிற்கு இல்லை.]

29. யானைக்கில்லை தானமும் தருமமும்
பூனைக் கில்லை தவமும் தயையும்
ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்
சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்
முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.

30. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

நறுந்தொகை

என்னும்

வெற்றிவேற்கை.

குறிப்பு.

1. வெற்றி வேற்கை என்பது வெற்றி தரும் வேலாயுதத்தை ஏந்திய கை என்று அர்த்தம் ஆகும்.

2. வெற்றி வேற்கை என்பது ஒரு நூலின் பெயர். இதை எழுதினவர் அதிவீரராம பாண்டியன். இவர் கொற்கைக்கு அதிபதி, 'கொற்கை' என்பது மதுரை ஜில்லாவின் கடல் ஓரமாயுள்ள ஒரு பட்டினம். இவர் தமயன் குலசேகர பாண்டியன். அவர் பாண்டிய நாட்டுக்கு அரசன். பாண்டியநாடு என்பது மதுரை, திருநெல்வேலி ஆகிய இரண்டு ஜில்லாக்களும் சேர்ந்த ஒரு தேசம். குலசேகரனுக்கு அதிவீரராமன் கீழ்ப்பட்ட அரசன். தமயனும், தம்பியும் தமிழில் வல்லவர்கள்.

3. வெற்றிவேற்கைக்கு நறுந்தொகை என்றும் பெயர் உண்டு. 'நறுந்தொகை' என்பது 'மணத்தின் சேர்க்கை' அதாவது, 'நல்லொழுக்கத்தைப் போதிக்கும்' நூல். நறுந்தொகையானது குலசேகரனும் கொண்டாடும் படியாய் இருந்தது. இந்த நூலின் பெருமையை ஒருவர் எடுத்து விளக்கியும், சுருக்கியும் ஒரு பாட்டாக எழுதியிருக்கிறார். அது இந்த நூலுக்குச் சிறப்புப்பாயிரமாய் இருக்கிறது.

சிறப்புப் பாயிரம்.

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசேகரன் புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.

"வெற்றி தரும் வேலாயுதம் கையில் பிடித்தவரும் கொற்கைக்கு அதிபதியுமான 'அதிவீர ராம பாண்டியன்' என்பவர் குலசேகர பாண்டியனும் கொண்டாடும்படியாய் நல்ல தமிழ் மொழிகளால் எழுதியிருக்கும் நறுந்தொகை என்னும் நூலின் உதவிகொண்டு 'எவர்கள் தங்களிடத்தில் உள்ள குற்றங்களை நீக்கிக் கொள்ளுகிறார்களோ' அவர்கள் குறை இல்லாமல் வாழ்ந்து வருவார்கள்.

என்பது இதன் கருத்தாம்.

4. ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

இது ஆத்தி சூடியின் காப்பு. ஆத்திசூடி என்பது அதன் அடி. அடியே நூலின் பெயராக வந்தது.

5. கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே.

இது கொன்றை வேந்தனின் காப்பு. கொன்றை வேந்தன் என்பது அதன் அடி. அதுவே நூலின் பெயராக வந்தது.

6. அவை போலவேதான் வெற்றிவேற்கை என்பது இந்த நூலின் சிறப்புப் பாயிரத்தின் அடி. அடியே இந்நூலுக்குப் பெயராக வந்தது. நூல்களுக்கு இவ்வாறு பெயர் இடுதல் தொன்றுதொட்ட மரபுவழக்கமாம்.

நீதிவாக்கியக் கதைகள்.

வெற்றி வேற்கை.

1. வித்தை கற்பிப்பவர் குரு ஆவார்.

[ஏகலைவன் சரிதம்.]

1. வடநாட்டில் ஒரு வனத்தில் வேடன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் ஏகலைவன். வில்வித்தை கற்க அவன் ஆசைகொண்டான். அந்த வித்தையில் சமர்த்தர் துரோணாசாரியார். அவரிடம் வேடன் சென்றான். அடி தொழுது வணங்கினான். தன் வேண்டுகோளை வெளி இட்டான். அவர் உத்திரவை எதிர்பார்த்து நின்றான்.

2. அதற்கு அவர், "சில ராஜ குமாரர்களுக்கு நான் வில்வித்தை கற்பித்து வருகிறேன். எனக்கு ஒழிவு காலம் இல்லை" என்று சொன்னார். பலமுறை அவன் வேண்டினான். அவர் உடன்பட இல்லை. அவன் கெஞ்சினான், பாதத்தில் விழுந்தான், வேண்டினான். காரியம் கை கூட இல்லை. திரும்பி அவன் தன் வனம் சேர்ந்தான்.

3. வேறு எவரிடத்திலும் வித்தை கற்க அவனுக்கு மனம் இல்லை. துரோணர்போல் மண் உருவம் ஒன்று செய்தான். தனியாய் ஒரு இடத்தில் அதை வைத்தான். பூஜை செய்தான். குருவாக அதை மதித்தான். தான் சிஷனாக இருந்தான். அதன்முன்நின்று வித்தைபழகினான். தவறினால் குருவை வேண்டுவான்; மீண்டும் மீண்டும் செய்வான்; கடைசியில் அவன் நல்ல தேர்ச்சி அடைந்தான்.

4. ஒரு நாள் அந்த வனத்தின் வழியே ஒரு நாய் சென்றது. அதன்மேல் வேடன் ஒரு அம்பு எய்தான். அது அர்ச்சுனனுடைய நாய். அதை அர்ச்சுனன் பார்த்தான். அதிசயித்தான். "அந்த விதமாய் அம்பு விடுவது தனக்கும், தன் குரு துரோணருக்கும் தான் தெரியும்" என்று அவன் எண்ணியிருந்தான். அவரும் அவனுக்கு அவ்வாறே சொல்லியிருந்தார். அது தான் உண்மை.

5. அர்ச்சுனன் உடனே வேடனிடம் சென்ருன். "உன் குரு யார்?" என்று கேட்டான். அதற்கு அவன் "துரோணுசாரியார் என் குரு. அவர் தான் எனக்கு வித்தை கற்பித்தார்" என்ருன். அர்ச்சுனன் கோபம் கொண்டான்; துரோணரிடம் ஓடினுன். அவரை அவன் கேட்டான். "நான் அவனுடைய குரு அன்று; நான் வித்தைசொல்லி வைத்தது இல்லை" என்று துரோணர் சொன்ஞர். அவருக்கு அது அதிசயமாய் இருந்தது.

6. இருவரும் வேடன் இருப்பிடம் சென்ருர்கள். வேடன் குருவை உபசரித்தான்; வந்தன வழிபாடு செய்தான்; விவரத்தை வெளியிட்டான். வித்தை கற்றதற்காக அவர் காணிக்கை கேட்டார். கேட்டதை அவன் கொடுத்தான். இவ்வுண்மையை அர்ச்சுனன் அறிந்தான்.

7. வேடனுக்கு வில்வித்தை நேரில் 'துரோணர்' கற்பிக்க இல்லை. அப்படி இருந்தும் அவர் உருவத்தை அவன் குருவாக எண்ணினுன். அந்த வித்தையில் தேறினுன். அவர்கேட்ட காணிக்கையை அவன் கொடுத்தான். இதுதான் குரு விஸ்வாசம். நமக்கு வித்தையை எவர் கற்பிக்கிருரோ, அவர் குரு ஆவார். ஆகையால்,

எழுத்தறி வித்தவ னிறைவ ஞகும்.

2. பிழை இல்லாமல் எதையும் சொல்லவேண்டும்.
[கும்பகர்ணன் சரிதம்.]

1. கும்பகர்ணன் ஒரு இராட்சதன். இராவணனுக்கு அவன் தம்பி. இராவணன் இலங்கைக்கு அரசன். கும்பகர்ணன் கல்விமான்; வேதம் ஓதினவன் 'ஒருநாளும் தான் அழியாமல் இருக்கவேண்டும்' என்று அவன் ஆசை கொண்டான். அப்படி வரம்பெற வழிதேடினன். அதற்காக அவன் தவம் செய்தான். நீண்ட காலம் தவம் செய்தான். கடுமையான தவம் செய்தான்.

2. எப்போதும் அழியாமல் இருப்பதற்கு நித்தியத்துவம் என்று பெயர். 'நித்தியத்துவம்' என்பது 'நித்தியமாய் இருத்தல்' அதாவது 'சாவாமல் எப்பொழுதும் இருத்தல்' கும்பகர்ணன் அரிய தவம் செய்தான். பலன் அடையுங்காலம் நெருங்கிற்று. பகவான் அவன் தவத்தை மெச்சினர். உடனே காட்சி கொடுத்தார். "உன் தவத்தை நாம் ஏற்றேம். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்; நாம் அளிப்போம்" என்று அவர் சொன்னர்.

3. அடக்கமுடியாத சந்தோஷம் கும்பகர்ணனுக்கு ஜனித்தது. தலை கால் தெரியவில்லை. 'தனக்கு ஈடு இனி ஒருவரும் இல்லை' என்னும் பெருமை பிறந்தது. 'எனக்கு நித்தியத்துவம் தரவேண்டும்' என்று அவன் கேட்க எண்ணினன். நீண்ட காலமாக அவன் ஆசைப்பட்டது அது. தவம் செய்துவந்ததும் அதற்காகவே தான். கும்பகர்ணன் கேட்க எத்தனித்தான்; வாய் திறந்தான்; வாய் குளறிவிட்டது. அவன் எண்ணினது ஒன்று; கேட்டது ஒன்றய் முடிந்தது. "எனக்கு நித்திரைத்துவம் வேண்டும்" என்று அவன் கேட்டான். அப்படியே அளித்தோம்" என்று சொல்லிவிட்டு, உடனே ஸ்வாமி மறைந்துவிட்டார்.

4. 'நித்திரைத்துவம்' என்பது எப்போதும் தூக்கத்தோடு இருத்தல். ஐயோ பாவம்! இதை யாராகிலும் கேட்பாரோ? அவன் கேட்டுவிட்டான். பகவானும் கொடுத்துவிட்டார். பலநாள் பட்டபாடு பாழ் ஆயிற்று. ஆசைகொண்ட பண்டம் ஊசலாயிற்று; பண்ணின தவம் பழுது ஆயிற்று. ஆசைப்பட்டது நித்தியம்; அடைந்தது நித்திரை. பரிதாபம்! பரிதாபம்!!

5. சொல்வதை அவன் திருத்தமாய் மொழிந்திருக்க வேண்டும். அதை அவன் செய்ய இல்லை. படித்த படிப்பு பயன்படாமல் போயிற்று. அல்லாமல் உள்ளதும் கெட்டது. தூக்கம் கைமேல் கிடைத்தது. எதுசொல்லவேண்டி இருந்தாலும் அதை நாம் கசடு இல்லாமல் சொல்லவேண்டும். கசடு என்பது குற்றம். தவறுதல் இல்லாமல் பேசுவதுதான் நாம் கற்ற கல்விக்கு அழகாகும். ஆதலால்,

கல்விக் கழகு கசடற மொழிதல்.

---

3. உறவினர்க்கு உதவுதல் செல்வர்க்கு அழகு.

[தனபால செட்டியார் சரிதம்.]

---

1. சிங்கபுரம் என்னும் நகரத்தில் ஒரு செட்டி இருந்தான். அவன் பெயர் தனபாலன். பெயர் நல்ல பெயரே அல்லாமல் அவன் ஏழை. அவனுக்கு இரண்டு பிள்ளைகள். அவன் கஷ்டப்பட்டு வந்தான். அவன் வீட்டின் கொல்லையில் சுவர் எடுக்கவேண்டியிருந்தது. கூலி கொடுக்க அவனிடம் பணம் இல்லை. தானே சுவர்வைக்க அவன் எண்ணம் கொண்டான். அதற்கு ஏற்ற சமயம் வந்தது.

2. ஒருநாள் அவன் மண்வெட்டி பிடித்து வேலைசெய்தான். வெட்டிக்கொண்டு வரும்பொழுது டங் என்று ஒரு

சத்தம் கேட்டது. மண்ணை அப்புறம் தள்ளினன். கட்டடம் ஒன்று தெரிந்தது. கட்டப்பாரை கொண்டு அதை இடித்தான். அது ஒரு சுரங்கம்; புகுந்து பார்த்தான்; ஒரே இருட்டாய் இருந்தது. காலின் கீழே சிறுசிறு கற்கள் கிடந்தன. ஒரு பிடி அள்ளி வெளியே வந்து பார்த்தான். அவை விலை உயர்ந்த இரத்தினங்கள். உடனே சுரங்கத்தின் வாயை அவன் மூடிவிட்டான் வேறு எவருக்கும் அது தெரியாது. பெண்சாதிக்கும் தெரியாது; பிள்ளைகளுக்கும் தெரியாது; இரகசியம் அவனேடேயே நின்றது. வெளியே தெரிவதற்கு இடம் இல்லை.

3. இரத்தினங்களை அவன் விற்ருன். பெரும் தொகை கிடைத்தது. பின்பு அவன் இரத்தின வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். இலாபத்தை எண்ணி, அவன் செய்ய இல்லை. ஊரார் அப்படி எண்ணிக்கொள்ளும்படி அவன் செய்தான். அவனிடம் இருந்த இரத்தினம் "இவ்வளவு" என்று சொல்லமுடியாது. அவன் பணக்காரன் ஆனன். தனபாலன் மெய்யாகவே 'தனபாலன்' ஆனன். செட்டி செட்டியாரானர். அரசனும் அவரிடம் கடன் வாங்கினன். கோடி வராகன் தனபாலசெட்டியார் கடன் கொடுத்தார். வேண்டிய பொழுது சுரங்கத்து இரத்தினம் உதவிற்று அரசனைவிட இவர் பணக்காரரானர்.

4. தன் உறவினர்களுக்கு உதவ அவர் எண்ணங் கொண்டார். வியாபாரம் செய்வதற்கு வேண்டிய திரவியம் சிலருக்கு முதல் கொடுத்தார். வட்டி விரும்ப இல்லை. அன்றியும் தன் இனத்தாருடைய பிள்ளைகளை எல்லாம் படிக்கவைத்தார் வந்தவர்களுக்கு எல்லாம் அன்னம் வழங்கினர். ஏழைகளுக்கு உதவிசெய்தார். இவ்வளவு தாமம் செய்ய அரசனலும் முடிய இல்லை. செட்டியார் இனம்

தலை எடுத்தது. எல்லோரும் கல்விமான் ஆனார்கள். பெருத்த வியாபாரி ஆனார்கள். பணக்காரர் ஆனார்கள். தனபால செட்டியாரால் அவருடைய இனத்துக்கே பெருமையும் செல்வமும் உண்டாயிற்று.

5 செல்வத்தை நாம் அநுபவிப்பது மாத்திரம் போதாது இனத்தாருடன் கூடி அநுபவிக்கவேண்டியது. அதுதான் நமக்கு அழகு செய்யும். ஆதலால்,

செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.

---

4. பிராமணர் ஒழுக்கத்தை விடலாகாது.

[ஆனந்தன் சரிதம்.]

---

1. பிராமணன் ஒருவன் பெயர் ஆனந்தன். உயர்ந்த குலத்தில் பிறந்தவன் வேதம் ஓதினவன். அவன் ஏழை; குடும்பம் பெரிது; அவன் தலைவன்; வரும்படியோ மட்டு. தகாத தொழிலை அவன் செய்ய நேர்ந்தது தினந்தோறும் அவன் காடு சேர்வான்; விறகு ஒடிப்பான்; கட்டுக் கட்டு வான்; தூக்கிக் கொண்டுபோய் சந்தையில் விற்பான். அதுதான் அவனுடைய வரும்படி; அவன் செலவுக்கு அதுதான் உதவி. வேறு வகை ஒன்றும் இல்லை.

2. இப்படி ஆனந்தன் செய்து வந்தான். ஒருநாள் காட்டில் நேரம்பிடித்தது. திரும்பும்பொழுது நாழிகை பதினைந்து; கோடைகாலம்; வெயில் தகித்தது; கால் ஒட்டிக்கொண்டது. சாலையில் நிழல் அதிகமாக இல்லை. இப்படிப்பட்ட வேளையில் அவன் நீர் கழிக்க நேர்ந்தது. விறகுக்கட்டை அவன் இறக்கினால், பின்பு தூக்கிவிடுவார் இல்லை. பிராமணன் அங்கும், இங்கும் பார்த்தான். ஒரு

வரும் இல்லை. ஒரு மரத்தில் சாய்ந்து கொண்டான். நின்றபடியே அவன் நீர் கழித்தான்.

3. அரசனும், மந்திரியும் குறுக்கு வழியாய் அங்கே சென்றார்கள். அவர்கள் வேட்டையாடித் திரும்பினவர்கள். விறகுதலைபன்போக்கை அவர்கள் கவனித்தார்கள். அவன் பிராமணன் என்பது தெரியவந்தது. அரசன் மனங் கலங்கினான். "இவன் கெடுவதற்கு அரசனே காரணம். பிராமணரை அரசன் காப்பாற்றவேண்டும். அது இல்லை. அதனால் இப்படிப்பட்ட தொழிலை இவன் செய்ய நேர்ந்தது" என்று மந்திரி சொன்னான். அவ்வேதியன் வீட்டுக்கு வேண்டிய பணத்தை அரசன் கொடுப்பதாக ஒப்புக் கொண்டான். அன்றோடு வேதியன் கஷ்டம் தொலைந்தது.

4. சில காலம் சென்றது. வேட்டையாட அரசனும், மந்திரியும் ஒரு நாள் சென்றார்கள். ஆற்றங்கரை வழியாய் அவர்கள் திரும்பினார்கள். மத்தியான வேளை; வைகாசி மாதம்; வெயில் கடுமை ஆற்றில் ஓட்டம் இல்லை; மணல் பொரிந்துகொண்டிருந்தது; அதன்மேல் ஒரு பிராமணன் நின்றான். அவன் தலைக்குமேல் உயர ஒரு துணி விரித்திருந்தது. அது அந்தரத்தில் நின்றது. பிராமணனுக்கு அது நல்ல குடையாய் இருந்தது. அவன்மீது வெயில் பட இல்லை. அவனுடைய பெருமையை அரசன் கண்டான். கொண்டாடினான். அதிசயித்தான்; "இவர் யாவர்?" என்று மந்திரியை அரசன் கேட்டான்.

5. அதற்கு மந்திரி "மகாராஜா! பழைய விறகுதலை வேதியர் இவர். பிராமணன் கவனிக்கவேண்டிய விஷயம் இரண்டு:—வேதம் ஓத வேண்டும்; ஒழுக்கம் கொள்ள வேண்டும். ஒன்று இல்லாவிட்டால் ஒன்று பயன்படாது. இரண்டும் கூடினால்தான் பெருமை உண்டாகும். முன்னே

இவரிடத்தில் பிராமண ஒழுக்கம் இல்லை. பெருமை உண்டாக இல்லை. இப்பொழுது இவரிடத்தில் ஒழுக்கம் விளங்குகிறது; பெருமை வெளிப்படுகிறது" என்றான். வேதம் ஓதுவதும், நடக்கவேண்டிய முறைப்படி நடப்பதும் பிராமணருக்கு அழகாகும். ஆதலால்,

வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.

---

5. நீதி தவறுமல் ஆளுதல் அரசனுக்கு அழகு.

[காவேரி கரைகண்ட சோழன் சரிதம்.]

---

1. காவேரி முற்காலத்தில் கரை இல்லாமல் இருந்தது. வெள்ளம் வந்தால் அக்கம் பக்கம் முழுகிவிடும். நெருப்பை எதிர்த்தாலும் எதிர்க்கலாம்; நீரை எதிர்க்க முடியுமா? அதனுல் விளைவு கெடும்; வீடு வாசல் நாசம் ஆவது உண்டு. கரை ஆற்றுக்கு இருந்தால், கெடுதி உண்டாகாது. இதை அரசன் கவனித்தான்.

2. கரை கட்ட அரசனுக்கு எண்ணம் உதித்தது. சிற்றரசர் அவன்கீழ் உண்டு. அவர்களுக்கு அவன் உத்திரவு அனுப்பினுன். கரை போடப்பட்டது. ஒரு பாகம் கரை இல்லாமல் இருந்தது. அங்கே கரை போட இல்லை. அந்த நாட்டு அரசன் சும்மா இருந்தான். சோழ ராஜா உத்திரவை அவன் மதிக்க இல்லை. சிறிது மமதை அவனுக்கு இருந்தது. அவன் பெயர் பிரதாபருத்திரன்.

3. பிரதாபருத்திரன் போக்கை அரசன் யோசித்தான். தன் கட்டளையை மீறினதின் நியாயம் விளங்க இல்லை. உடனே அரசன் மந்திரியை அழைத்தான். "பிரதாபருத்திரனுடைய படம் ஒன்று எழுதி வருவிப்பாய்" என்றான். படம் தயாரிக்கப்பட்டது. அரசனிடம் கொடு

பட்டது. பலமுறை அதை அவன் பார்த்தான். நெடு நேரம் யோசித்தான். உருவத்தின் நெற்றியிலும் ஒரு கண் இருந்தது. பிரதாபன் முக்கண்ணன். இதனால்தான் அவன் கருவம் கொண்டிருந்தான். அதை அரசன் அறிந்தான். அதனால் கோபம் அவனுக்கு வந்தது.

4. உடனே அரசன் சபை கூட்டினன். "பிரதாபனை உடனே கண்டிக்கவேண்டும். என் வேலாயுதம் எங்கே?" என்ருன். சபையோர் நடுங்கினர்கள். பிரதாபன் மூர்க்கன். அன்றியும் பலிஷ்டன். "அவனோடு போர் நேர்ந்தால் என்ன கேடு உண்டாகுமோ" என்று அவர்கள் பயந்தார்கள். ஒருவரும் வாய் திறக்க இல்லை. அரசன் முகத்தில் கோபம் ஜொலித்தது. கண் சிவந்தது. மீசை படபட என்று துடித்தது. அரசன் வேலாயுதத்தை எடுத்தான். பிரதாபனுடைய உருவம் அவன் முன் இருந்தது. 'உன் கருவம் அடங்குவதாக' என்ருன். உருவத்தின் நெற்றியில் இருந்த கண்ணை ஆயுதத்தால் அவன் குத்தினன். சிறிது நேரம் சும்மா இருந்தான். பின்பு எழுந்து போய்விட்டான். சபையும் கலைந்தது.

5. அதே வேளையில் பிரதாபனுடைய மூன்ருவது கண் மறைந்தது. நியாயம் அவனுக்கு விளங்க இல்லை. தன்னை அரசன் தண்டித்த முறை பின்பு தெரிந்தது. அவன் நடுங்கினன். உடனே கரை போட்டுவித்தான். காவேரி கரை கண்ட சோழன் என்னும் பெயர் சோழராஜனுக்கு வந்தது. அரசன் நீதி தவருமல் இருந்தால் யுத்தம் இல்லாமலே ஆளலாம். ஆதலால்,

மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.

---

6. பொருளை விருத்தி செய்யவேண்டும்.

[தனசேகரன் சரிதம்.]

---

1. வடநாட்டில் வணிசபுரி என்றொரு பட்டணம் உண்டு. அதில் ஒரு செட்டியார் இருந்தார். பெருத்த வியாபாரி; பணக்காரர்; பணத்தை வட்டிக்குவிட்டுவிருத்தி செய்தவர். அவர் வியாபாரம் தொடங்கும் பொழுது அவரிடம் பதினாயிரம் வராகன் இருந்தது. இருபது வருஷம் வியாபாரம் செய்தார். இரண்டு லக்ஷம் வராகன் அவரிடத்தில் சேர்ந்தது. அவர் இறந்துபோனார். அவருக்கு ஒரே பிள்ளை. அவன் பெயர் தனசேகரன்.

2. "தகப்பன் வைத்த பொருளே போதுமானது" என்று மகன் எண்ணினான். வியாபாரத்தை நிறுத்தினான்; வரவேண்டிய பணத்தை வசூலித்துவந்தான்! நிலுவை அதிகமாக நின்றது! வருவதற்கு வழியில்லாமல் போயிற்று. கடன் கொடுத்திருந்த பணம் முழுவதும் கிடைக்க இல்லை. பத்து வருஷத்துக்குள் அவன ஏழையானான். பணம் எல்லாம் போய்விட்டது; நாணயமும் இல்லை; அவன் கஷ்டத்தை அடைந்தான்; செலவுக்கோ பணம இல்லை; கடன் கொடுப்பாரும் இல்லை. உதவி செய்வாரும் இல்லை.

3. பணம் இருந்தால் எல்லோரும் குலாவுவார்கள். பணம் இல்லாவிட்டால் ஒருவரும் நெருங்கார்கள. இது ஒரு பழமொழி. சேகரன் விஷயத்தில் அது மெய்த்தது. அவன் துக்கம் அடைந்தான்; இன்னது செய்வது என்று தெரிய இல்லை; ஒருவருக்கும் சொல்லாமல் அவன் தூரதேசம் சென்றான். அங்கே ஒரு வியாபாரி இடம் சம்பளத்துக்கு அமர்ந்தான். சிறிது காலம் சென்றதும்

அந்த வியாபாரி தனசேகரனுக்கு வியாபாரத்தில் ஒரு கூட்டுவைத்தான். வரவர அதிக லாபம் கிடைத்தது; ஐந்து வருஷத்தில் தனசேகரனுக்கு இருபதினாயிரம் வராகன் கிடைத்தது. அதை எடுத்துக்கொண்டு, அவன் தன் தேசம் சென்றான். ஊரார் அவனை வரவேற்றார்கள்.

4. அங்கே அவன் வியாபாரம் செய்தான். செட்டும் சீருமாக இருந்தான். பின்பு முப்பது வருஷம் உயிரோடு இருந்தான். அதற்குள்ளாக அவன் கோடீசுவரன் ஆனான். அரசர்களும் அவனிடம் கடன் பெற்றார்கள். தனசேகரன் என்னும் பெயர் அவனுக்கே உரியது என்று சொல்லும்படி ஆயிற்று. வியாபாரம் செய்வது வைசியர் தொழில், பொருள் சம்பாதிப்பதும் அவர்கள் தொழில். அதை அவர்கள்செய்யாதிருப்பது குறைவாகும். ஆதலால்,

வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.

---

7. உழுது பயிரிடுதலின் பெருமை.

[குணசேகரனும் குடியானவனும்.]

---

1. குணசேகரன், என்பவன் ஒரு இராஜா. வேட்டையாட அவன் ஒரு நாள் சென்றான். காட்டுக்குள் புகுந்தான். நாலா பக்கமும் அலைந்தான்; மிருகம் ஒன்றும் கிடைக்க இல்லை. பசி எடுத்தது. தாகமும் எடுத்தது. அரசன் தனித்து இருந்தான். பொழுதும் போயிற்று. செய்வது இன்னது என்பது அரசனுக்கு விளங்கவே இல்லை. திக்கு திசை தெரியவில்லை. அவன் மனம் கலங்கிற்று.

2. வழியில் ஒரு குடியானவன் வீடு இருந்தது. அதற்குள் அரசன் புகுந்தான், குடியானவன் வீட்டில் இருந்தான், விருந்தை அவன் உபசரித்தான். கை கால் சுத்தி செய்துகொள்ள நீர் கொடுத்தான். அவன் பெண் சாதி அன்னம் படைத்தாள். சாப்பாடு சாதாரணமானது. ஆயினும் அரசனுக்கு அது அமிர்தமாக இருந்தது. அரசன் உண்டான். சிறிது பொழுது களைப்பு ஆறினன்.

3. குடியானவனுக்கு இரண்டு பிள்ளைகள். இருவரும் வயது வந்தவர்கள். உழுது பயிரிட்டு அவர்கள் சீவனம் செய்து வந்தார்கள். உணவுக்கு அவர்கள் வருந்தினது இல்லை. வீட்டில் எல்லாரும் உற்சாகமாகவே இருந்தார்கள். அரசன் சந்தோஷம் அடைந்தான். படுக்கை ஒன்று அவனுக்கு அளிக்கப்பட்டது. எல்லோரும் அன்பு பாராட்டினார்கள். "நீர் யார்" என்று ஒருவரும் கேட்க இல்லை. வந்த விருந்து அரசன் என்பது ஒருவருக்கும் தெரியாது.

4. பின்பு அரசனும் குடியானவனும் பேசலானார்கள். அரசன் பல கேள்விகள் கேட்டான். குடியானவன் தக்கபடி விடை அளித்தான். பின்பு அரசன் "உலகத்தில் பலவிதமான தொழில்கள் உள்ளன. அவைகளுள் நிலம் பயிரிடுதல் ஒன்றாகும். மனிதர் உயிர் வாழ்வதற்கு அது அவசியமாய் இருக்கிறது. உணவு இல்லாமல் யார்தான் என்ன செய்ய முடியும்? அதுதான் பிரதானமாயிருக்கிறது.

5. "தேசத்தை ஆளும் அரசனாகவே இருக்கட்டும். அன்னம் ஒடுங்கினல் ஐந்தும் ஒடுங்கிவிடும் அல்லவா? ஆகாரம் ஜீவாதாரம். அதற்கு வேண்டிய பொருள்களை உண்டுபண்ணுவதே மேலானது ஆகும். பயிர் இடும் தொழில் செய்பவரே சிறந்தவர் ஆவார். உலகத்தை அவர்கள்

தான் காப்பாற்றுகிறவர்கள். அவர்களுக்கு ஒப்பு இல்லை. அரசனும் ஈடு இல்லை'' என்று சொன்னான்.

6. உழவு தொழில் மேலானது என்று அரசனே சொல்லுகிறான். ஆகவே அது சிறந்தது. ஆதலால்,

உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்.

---

8. மந்திரிக்கு இன்னது அழகு.

[விபீஷணனும், இராவணனும்.]

---

1. காட்டுக்கு ஸ்ரீ ராமர் சென்றார். இலக்ஷ்மணனும், சீதையும் சென்றார்கள். இலக்ஷ்மணன் ஸ்ரீ ராமருடைய தம்பி. சீதை ராமருடைய மனைவி. சீதைமேல் இராவணன் இச்சைகொண்டான். இராவணன் இலங்கை அரசன். அவன் இராக்ஷதன். இராக்ஷதருக்கு எல்லாம் அரசன். ஒருவரும் இல்லாத தருணம் வாய்த்தது. சீதையை இராவணன் கொண்டுபோய்விட்டான். இலங்கையில் ஒரு வனத்தில் அவளை அவன் சிறைவைத்தான்.

2. சீதையை ஸ்ரீராமரும், லக்ஷ்மணனும் தேடினார்கள். சுக்ரீவனோடு ஸ்ரீ ராமர் சிநேகம் கொண்டார். வானரர்களுக்கு அவன் அரசன். அவனுடைய மந்திரி அநுமார். சீதை இருக்கும் இடத்தை அறிந்துவர அநுமார் சென்றார். அந்த அம்மணியை அவர் கண்டார். அவர் வாலில் தீ வைக்கும்படி இராவணன் கட்டளையிட்டான். இலங்கையை அவர் கொளுத்தினார். பின்பு ஸ்ரீ ராமரிடம் அவர் சென்றார். நடந்தவை முழுதும் சொன்னார்.

3. இராவணன்கோபங்கொண்டான். உடனே சபை கூட்டினான். எல்லா மந்திரிகளும் கூடினார்கள். அவர்களுள் ஒருவன் விபீஷணன். அவன் இராவணனுடைய தம்பி.

அவன் "அண்ணா! நீர் பலம் உள்ளவர் என்பது யாவரும் அறிந்த விபரம், தேவர்கள் உம்மை எதிர்க்க முடியாது. அப்படி நீர் வரம் பெற்றிருக்கிறீர். இராக்ஷதர் உம்மை ஜெயிக்க முடியாது. அப்படி நீர் வரம் பெற்றிருக்கிறீர். மனுஷனை நீர் மதிக்க இல்லை. வரம் கேட்க இல்லை. மனுஷனால் உமக்கு மரணம் வரலாம். 'ஸ்ரீ ராமர் சாதாரணமனுஷன் என்று எண்ணவேண்டாம். பகவான் மனுஷ்ய ரூபமாய் வந்திருக்கிறார்' என்று எண்ணவேண்டும். சீதை லோக மாதா. சீதையை உடனே கொண்டுபோய் ஸ்ரீ ராமரிடத்தில் விட்டுவிடவேண்டும். இது என் அபிப்பிராயம். மன்னித்தருளும்படி அவரை நீர் வேண்டுவதே முறை" என்று சொன்னான். பலமுறையும் வேண்டினான்.

4. தம்பி சொன்ன புத்தியை இராவணன் கேட்க இல்லை. விபீஷணன் சொன்னபடியே ஆனது. ஸ்ரீ ராமருக்கும், இராவணனுக்கும் போர் நடந்தது. இராவணன் மாண்டான். விபீஷணன் மந்திரி. மந்திரிகள் புத்திசாலிகள். மேல் நடக்கும் விஷயங்களை முந்தியே அறிந்து தெரிவிப்பவர்கள். ஆதலால்,

மந்திரிக்கழகு வரும்பொரு ளுரைத்தல்.

---

9 போர்வீரன் இலக்ஷணம்

[மலைவீரன் சரிதம்.]

1. மலையாபுரி என்பது ஒரு பட்டணம். அதற்கு இரண்டு பக்கத்திலும் மலை. ஒரு பக்கம் ஆறு. அது அரண் உள்ளது. அதை உத்தமநாதன் என்பவன் ஆண்டு வந்தான். நீதி தவறாதவன். நாடு செழித்தது. காடு தழைத்தது. குறை என்பது இல்லாமல் இருந்தது. சத்துரு பயமே அங்கு இல்லை. செல்வம் பொங்கி வந்தது.

2. உத்தமநாதனுக்கு ஒரு தம்பியிருந்தான். அவன் கெட்டவன். பக்கத்துநாட்டு அரசனோடு அவன் கலந்தான். இருவரும் சதியாலோசனை செய்தனர். பெருஞ்சேனை திரட்டினர். உத்தமநாதனுடன் போர்செய்யச் சென்றனர்.

3. உத்தமநாதன் என்ன செய்வான்? அவனுடைய சேனை சிறிது. போர்நேரும் என்று அவன் எண்ணவே இல்லை. அவனுடைய சேனைக்கு அதிபதி மலைவீரன். அவன் தைரியசாலி; துணிவு கொண்டவன்; போர் நடத்துவதில் சமர்த்தன்; அஞ்சாத தீரன். அவன் மகனும் சேனையில் அமர்ந்திருந்தான். அவனும் போரில் வல்லவன்.

4. சேனை புறப்பட்டது. மலைவீரனும் அவன்மகனும் சென்றார்கள். இரண்டுசேனைகளும் கை கலந்தன; பேரிகை முழங்கிற்று! ஒருவரை ஒருவர் எதிர்த்தார்கள்; மாண்டார் சிலர்; விழுந்தார் சிலர்; கை முறிந்தார் சிலர்; கால் ஒடிந்தார் சிலர்; வெட்டுண்டார் சிலர்; கட்டுண்டார் சிலர்; சிறையானார் சிலர்; முதுகுகாட்டி ஓடினார் சிலர்; மலைவீரனுடைய சேனை பின்வாங்கிற்று; தைரியமொழி அவன் கூறினான்; வெறிகொண்டு அவன் முன் சென்றான்.

5. அவனுக்கு ஆவேசம் பிறந்தது; குதிரையை அவன் நடத்தினான்; "முன் வைத்த காலை நீங்கள் பின் வையாதேயுங்கள்." என்று சொல்லிக்கொண்டேபோனான். தைரியத்தை வீரர்களுக்கு ஊட்டினான். எதிரியின் சேனைக்குள் அவன் புகுந்தான். வழியில் எதிரி ஒருவன் மலைவீரன் மகனை வெட்டிவிட்டான். தலைவேறு உடல்வேறு ஆயிற்று. மலைவீரன் கண்ணுக்கு எதிரே இது நடந்தது. தலை வேறாகும்பொழுது அவன் பார்த்தான்; அவன் பாராட்டவில்லை; மனம் கலங்கவும் இல்லை; "என் மகன் போரில்

மாண்டான்; வீரசுவர்க்கம் அடைந்தான்.'' என்று எண்ணி அவன் எதிரிமேற் பாய்ந்தான்.

6. மலைவீரன் பயமறியாதவன்; யமனுக்கும் பயப்படாதவன்; கீரையை அரிவதுபோல் எதிரியின் சேனையை அவன் அரிந்தான். அவன் ஒருவன்; எதிரி ஆயிரக்கணக்கு; அவர்கள் ஓடினார்கள்: எதிரியின் தளகர்த்தன் பிடிபட்டான்; போர்முடிந்தது; மலைவீரன் வெற்றிபெற்றான்.

7. மகன் மாண்டதையும் மலைவீரன் கவனிக்கவில்லை. அவன் சுத்தமான போர்வீரன்; அஞ்சாதசூரன்; எதையும் மதியாமல் எதிரியோடு எதிர்த்து, அவன் நின்றான். நல்ல கீர்த்தி அவனுக்குக் கிடைத்தது. ஆதலால்,

தந்திரிக் கழகு தறுகணாண்மை.

---

10. பிறருக்கு அன்னம் இட்டு உண்ண வேண்டும்.

[இளையான்குடிமாறன் சரிதம்.]

---

1. முன்னொருகாலத்தில் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் பெயர் இளையான்குடி மாறன். விருந்தை உபசரிப்பது அவர் வழக்கம். சிவனடியாரிடத்தில் அன்புள்ளவர்; விருந்தின் வரவை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பவர்; அவர் பெண்சாதியும் அப்படியே. இருவரும் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

2. வரவர மாறன் ஏழையானார். ஒரு சிறு வீட்டில் இருந்து வந்தார். விருந்தை உபசரிக்கும் வழக்கத்தை அவர் விட இல்லை. ஒரு நாள் வீட்டில் அரிசி இல்லை.

கடன் வாங்கும் வழக்கம் இல்லை. அன்று சமையல் இல்லை. புருஷனும், பெண்சாதியும் பட்டினி. பகல் பொழுது சென்றது. சாயங்காலம் ஆயிற்று.

3. தீபம் வைத்ததும் விருந்தினர் ஒருவர் சென்றார். மழைபெய்து அப்பொழுதுதான் நின்றது. வீடு எங்கும் ஒழுக்கு; விருந்து உட்கார இடம் இல்லை; போட அன்னமும் இல்லை. மாறன் என்ன செய்வார்? அவர் பின்வாங்க இல்லை; சிறிது நேரம் யோசித்தார்; அன்று காலை அவர் வயலில் விதை விதைத்திருந்தார்; அந்த ஞாபகம் வந்தது. ஒரு கூடையை எடுத்துக்கொண்டார்; வயல் சேர்ந்தார்.

4. வயலில் மழைநீர் தேங்கி நின்றது. அதன்மேல் நெல் மிதந்துகொண்டிருந்தது. அதை அவர் அரித்தார்; சேகரித்தார்; கூடையில் சேர்த்தார்; கூடை நிரம்பிற்று; எடுத்துக்கொண்டு, அவர் வீடு சென்றார்; பெண்சாதியிடம் கொடுத்தார். இருவரும் சந்தோஷம் அடைந்தார்கள்.

5. அந்த அம்மணி அதை வாங்கினாள். நெல்லை அவள் உலர்த்தினாள்; ஈரம்போயிற்று; பின்பு அதை அவள் குத்தினாள்; அரிசி எடுத்தாள்; சமையல் செய்தாள்; அன்னம் தயாராயிற்று; குழம்பு முதலியன வற்றையும் செய்தாள்; ‘‘விருந்தினரை அழைத்துவரலாம்’’ என்று புருஷனிடத்தில் அவள் சொன்னாள்.

6. விருந்து திண்ணையில் இருந்தார். அவரிடத்துக்கு மாறன் சென்றார். விருந்து அங்கே இல்லை; மாறன் கலங்கினான்; அவர்பெண்சாதியும் கலங்கினாள்; அங்கும இங்கும் தேடினார்கள்; விருந்து இல்லை; எங்கேயோ அவர் போய்விட்டார்; புருஷனும், பெண்சாதியும் துக்கம் அடைந்தார்கள். அக்கம் பக்கம் போய் விசாரித்தார்கள்.

7. இருவரும் தெருவில் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது நடு நிசி. திடீர் என்று வெளிச்சம் ஒன்று தோன்றிற்று. ஊரெங்கும் தெரிந்தது; ஜனங்கள் வெளியே சென்று பார்த்தார்கள்; மாறன் வீட்டு வாசலில் ரிஷப வாகனம் நின்றது; அதன்மேல் பரமசிவன் வீற்றிருந்தார். எல்லோரும் அங்கே கூடினார்கள்.

8. "பரமசிவனே விருந்தாக வந்தார்" என்று விளங்கிற்று. மாறனை எல்லோரும் கொண்டாடினார்கள். அவரால் எல்லோருக்கும் காட்சி கிடைத்தது. விருந்தை உபசரித்ததின் பலன் கைமேல் கிடைத்தது. விருந்துக்கு அன்னம் இடாமல் சாப்பிடலாகாது. பிறருக்கு அன்னமிட்டு உண்பது சிறந்தது. உணவுக்கு அதுதான் அழகாகும். ஆதலால்,

உண்டிக்கழகு விருந்தோ டுண்ணல்.

---

11. புருஷனுடன் எதிர்த்து உரையாடலாகாது.

[சண்டிகை சரிதம்.]

---

1. கௌசிகர் என்பவர் ஒரு ரிஷி. அவருக்கு ஒரு சிஷன். அவன் பெயர் உத்தாலகன். குரு மனப்படி அவன் நடந்து வந்தான். அவர் சந்தோஷம் அடைந்தார். அவனுக்குப் பெண் ஒன்று அவர் தேடினார். அந்த ஊரிலேயே அவனுக்கு விவாகம் முடித்தார். "பெண்சாதியும், நீயும் இந்த ஊரில் வாழ்ந்து வாருங்கள்" என்று அவர் ஆசீர்வதித்தார். பின்பு அவர் போய்விட்டார்.

2. ஒருநாள் அவன் வீட்டுக்கு அவன் மாமன் சென்றார். "அவருக்கு விருந்து பண்ணவேண்டும்" என்று அவன் சொன்னான். 'மாட்டேன்' என்று அவள் சொன்னாள்.

சமயல் செய்யவும் இல்லை; வந்தவரை உபசரிக்கவும் இல்லை: அது அவனுக்கு அவமானமாக இருந்தது.

3. ஒரு நாள் பெரியவர் ஒருவர் சென்ருர். அவரை அவன் உபசரித்தான்; அவருக்கு அன்னம் வழங்கும்படி மனைவியிடம் சொன்னன்; அவள் சும்மா இருந்தாள்; பின்பு அவனே அவருக்கு அன்னம் படைத்தான்.

4. அவள் சண்டிகை. புருஷன் எது சொன்னலும் எதிர்த்து, அவள் பேசுவாள்; மாருக நடப்பாள்; அவனுக்கு அது புண்ணுக இருந்தது; விதியை நினைத்து, அவன் துக்கித்துக்கொண் டிருந்தான்.

5. ஒரு நாள் அவன் குரு அங்கே சென்ருர். தன் கஷ்டத்தை அவன் புலம்பினன். அவர் புன்சிரிப்பு அடைந்தார். "அதற்கு ஒரு வழி உண்டு; உனக்கு எது வேண்டுமோ அது வேண்டாமென்று சொல்லு;உன் மனப்படி எதுவும் நடக்கும்" என்று சொல்லி அவர் போய்விட்டார்.

6. உறுதியாக அதை அவன் கைக்கொண்டான். ஒரு சுபதினம் வந்தது. "இன்று இருபதுபேருக்குவிருந்து செய்வது ஊர்வழக்கம். நம்முடைய வீட்டில் ஒன்றும் செய்யவேண்டாம். சமையலே வேண்டாம்" என்ருன். அதற்கு அவள் "நாம் சும்மா இருக்கலாகாது" என்று சொன்னள். தெருவார் எல்லோரையும் தானே போய் அழைத்தாள்; நல்ல விருந்து செய்தாள்.

7. அவனுடைய தகப்பனர் திவசம்வந்தது. "இன்று என் தகப்பனர் திவச தினம். ஒன்றும் செய்ய வேண்டாம்" என்று அவன் சொன்னன். அதற்கு அவள் "திவசத்தை நிறுத்தலாமா? பிதுர்க்கள் சபியாரா?" என்று

சொன்னாள். அதற்கு ஆகவேண்டியதை அவளே செய்தாள். புருஷன் சந்தோஷம் அடைந்தான். தலை கால், தெரிய இல்லை. அவள் குணத்தை அவன் மறந்து போனான். "இந்த எச்சல் இலைகளை நாய்கள் தின்னலாகாது. குழியில் போட்டு மூடு" என்று சொன்னான். அவைகளை அவள் கட்டினாள்; நாய் முன் வைத்தாள்; அவைகளை நாய்கள் தின்றன; பிதுர்க்கள் சபித்தார்கள்.

8. பெண்கள் புருஷன் சொற்படி நடக்கவேண்டும். எதிர்த்து அவர்கள் பேசலாகாது. பேசாமல் இருத்தல் அவர்களுக்கு அழகு. ஆதலால்,

பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.

---

12. பதிவிரதையின் சிறப்பு.

[நளாயினி சரிதம்.]

---

1. நளன் ஒரு அரசன். அவன் பெண் நளாயினி. அவள் பருவம் அடைந்தாள். விவாகம் நடைபெற வேண்டிய காலம் வந்தது. பல இராஜ குமாரர்கள் சென்றார்கள். அவள் மனத்திற்கு இசைந்த புருஷன் கிடைக்கவில்லை.

2. ஒரு நாள் ரிஷி ஒருவர் அரசனிடம் சென்றார்; அவர் குஷ்டரோகி; "உன் பெண்ணை எனக்கு விவாகம் செய்து கொடு" என்று அவர் கேட்டார். அரசன் என்ன செய்வான்? கேட்டபடி செய்யாவிட்டால், ரிஷி சாபம் இடுவார்; அவன் மனம் கலங்கினான். "சுவாமி! என் பெண் பிடிவாதம் கொண்டிருக்கிறாள். என்சொல்லை அவள் மதிப்பது இல்லை. அவள் சம்மதத்தை நீர் பெறுவீரானால் தடையே இல்லை" என்று அவன் சொல்லி அனுப்பினான்.

3. நளாயினி மாளிகைக்கு ரிஷி சென்றார். வழியில் தம் கோலத்தை மாற்றினர். அழகிய உருவம் எடுத்தார். யௌவன புருஷனாக அவர் விளங்கினர். இராஜகுமாரத்தி பார்த்தாள். அவர் மேல் விருப்பம் கொண்டாள். தன் மோதிரத்தை அவள் கழற்றினாள். அவரிடம் கொடுத்தாள். "என் சம்மதத்திற்கு இது அடையாளம். இதைக் கொண்டு போய் என் பிதாவிடம் காட்டுங்கள்" என்றாள்.

4. ரிஷி புறப்பட்டார். பழைய உருவத்தோடு அரசனிடம் சென்றார். மோதிரத்தை அவன் பார்த்தான். திடுக்கிட்டான். மலைத்தான்; "விதிவலிது; யார் அதை வெல்ல முடியும்?" என்று எண்ணிக்கொண்டான். விவாகம் நடந்தது. குஷ்டரோகிக்கு நளாயினி மாலையிட்டாள்.

5. பத்தினியை அழைத்துக்கொண்டு ரிஷி போய் விட்டார். நளாயினி இராஜகுமாரத்தி. புருஷன் குஷ்டரோகி. அவரை அவள் பாதுகாத்து வந்தாள். அவர் மனப்படி நடப்பாள் எதிர்மொழி சொல்லாள். "நமக்கு அவரே தெய்வம்" என்று எண்ணுவாள். "தினம் வேடிக்கை பார்க்கவேண்டும்" என்று அவர் சொல்லுவார். ஒரு கூடையில் அவரை அவள் வைப்பாள். தூக்கிக் கொண்டு போவாள்; கொஞ்சமேனும் அவள் மனம் கசியாள்.

6. இந்த விதமாய் அவள் நடந்து வந்தாள். ரிஷி சந்தோஷம் அடைந்தார். அவர் குஷ்டரோகி அல்ல. அவள் மனதை அவர் சோதித்தார். பின்பு அது தெரிய வந்தது. சுகமாய் அவள் வாழ்ந்து வந்தாள்.

7. நளாயினி இராஜகுமாரத்தி; நல்ல குணம் உடையவள். புருஷன் மனப்படி அவள் நடந்தாள். அவரை

அவள் பாதுகாத்து வந்தாள். பதிபக்தி பூண்டாள். மனம் ஒத்து அவள் செய்தாள். அவளுக்கு அது பெருமையை உண்டாக்கிற்று. நன்மையும் உண்டாயிற்று. ஆதலால்,

குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.

13. அடக்கமே மேலானது.

[சேரமாண்டார் சரிதம்.]

1. தமிழர் ஒருவர். பெயர் சேரமாண்டார். சிவபக்தர்; அடியாருக்கு அவர் உதவிசெய்பவர். நன்மையையே செய்பவர். தீங்கு இன்னது என்பது தெரியாதவர். அவர் கற்றவர். தேவாரம் ஓதுவார். அடக்கமும் உள்ளவர். பொறுமை உடையவர். கோபத்தை அறியாதவர்.

2. இவருடைய பெருமை அரசனுக்கு எட்டிற்று. அவன் அதிசயித்தான். "கோபம் இல்லாமல் ஒருவன் எப்படி இருக்கமுடியும்?" என்று அவன் யோசித்தான். அவரை அவன் சோதிக்க எண்ணினன். துணையாக ஒருவன் ஏற்பட்டான். இருவரும் சமயம் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

3. சேரமாண்டார் ஏழை. பரமஏழை, வாய் திறந்து ஒருவரையும் ஒன்றும் அவர் கேளார். அவர் தாயாரும் அப்படியே. செலவுக்கு அவரிடத்தில் பணம் இல்லை. நாள் இரண்டு அவர்கள் பட்டினி. தாயாரிடத்தில் அவர், "அம்மா! நீ கவலைப்படவேண்டாம். நம்முடைய வீட்டின் கொல்லையில் ஒரு புளியமரம் இருக்கிறது. அது காய்ப்பு இல்லை. நாளை அதை விற்று விடுகிறேன். பிரியமுள்ளவர்கள் அதை வாங்குவார்கள். செலவுக்கு உதவும்" என்றார்.

4. இந்த விபரம் அரசன் செவிக்கு எட்டிற்று. பொழுது விடியுமுன் தன் துணைவனை அவன் வரவழைத்தான்; ஏதோ அவனிடத்தில் சொன்னான்; துணைவனும் புறப்பட்டான்; சேரமாண்டார் கொல்லை சேர்ந்தான். புளிய மரத்தை வெட்டினான்; வெட்டின சத்தம் வீட்டுக்குள் கேட்டது; உடனே சேரமாண்டார் தாயார்போனாள். "எங்கள் மரத்தை நீ ஏன் வெட்டுகிறாய்? என்று கேட்டாள் "போ, போ; நீ யார் கேட்கிறவள்? உங்கள் மரமல்ல" என்றான் துணைவன். வீட்டுக்குள் சென்றாள். அந்த விவரத்தை அவள் தன் பிள்ளையிடம் சொன்னாள்.

5. உடனே சேரமாண்டார் அங்கே சென்றார். அவரை அவன் பார்த்து, "ஐயா! பெரியவரே! இது என் மரம்; இதை நான் வெட்டுகிறேன்: அதற்காக உம்முடைய தாயார் கோபிக்கிறாள். இதுவும் ஒரு வேடிக்கைதான்" என்றான். அதற்கு அவர் "அப்பா! கோபித்துக் கொள்ளாதே! அது "எங்கள் மரம்" என்று இதுவரை எண்ணி இருந்தோம்; அதை நம்பி அவள் கேட்டாள்; உன் மரத்தை நீ வெட்டிக்கொள்; தெரிந்து கொள்ளாமல் அவள் கேட்டுவிட்டாள். அது பிசகுதான்" என்றார். துணைவன் அரிவாளை அங்கே போட்டான்; போய் அவர் காலில் விழுந்தான்; "ஐயா! நான் செய்தது பிசகு; பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்றான். இதை அரசன் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவனும் சென்று அவரை வணங்கினான்; அவர் அடக்கத்தை மெச்சினான். அன்று முதல் அவர் செலவுக்கு வேண்டிய பணத்தை அரசன் கொடுத்து வந்தான். நூல்களை நாம் கற்க வேண்டும். கற்றபின் அவற்றின்பொருளை அறியவேண்டும். அறிந்தபின் அடங்கி

இருக்கவேண்டும். அடக்கமே மேலானது. அதுதான் அழகுசெய்யும். பெருமை அதுதான்கொடுக்கும். ஆதலால்,

அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.

---

14. ஏழைகள் கொள்ளவேண்டிய முறை.

[ஹரிச்சந்திரன் சரித்திரம்.]

---

1. அயோத்தியா என்பது ஒரு பட்டணம். அதை ஹரிச்சந்திரன் என்பவன் ஆண்டுவந்தான். கௌசிகர் என்பவர் ஒரு ரிஷி. யாகம் செய்வதாக அரசனிடம் அவர் பொருள் கேட்டார். பெரும் தொகை கொடுப்பதாக அவன் வாக்கு அளித்தான். "அது உன்னிடத்திலேயே இருக்கட்டும்; வேண்டியபொழுது வாங்கிக் கொள்கிறேன்" என்று சொல்லி; அவர் போய்விட்டார். சில காலம் சென்றது. கௌசிகர் தொகை கேட்டார்; தொகை செலவாய் விட்டது; அரசனிடம் பணம் இல்லை; ஈடுசெய்ய வழியில்லை.

2. தன் ராஜ்ஜியத்தை ஹரிச்சந்திரன் இழக்க நேர்ந்தது, கடன் ஈடாக இல்லை; தன் மனைவியையும், புத்திரனையும் அழைத்துக் கொண்டு, காசிக்கு அவன் சென்றான். அவன் மனைவி பெயர் சந்திரமதி. அவளை அவன் ஒரு பிராமணனுக்கு விற்றான். மகனும் தாயோடு சென்றான்; தாயும், பிள்ளையும் நெற்றி வேர்வை நிலத்தில் விழ வேலை செய்து வந்தார்கள். மனைவியை விற்றபணம் போத இல்லை. பின்பு ஹரிச்சந்திரன் ஒரு பறையனுக்கு அடிமையானான். கௌசிகர் பணம் கொடுக்கப்பட்டது.

3. சுடலைகாக்கும் வேலை ஹரிச்சந்திரனுக்கு இடப் பட்டது. அதை அவன் பழுது இல்லாமல் பார்த்து வந்தான். அவன் மகன் பெயர் தேவதாசன். ஒரு நாள்

அவன் காடு போனுன். அவன் சிறுவன்; பாம்பு தீண்டி அங்கே அவன் மாண்டான். அது இராத்திரிவேளை; காடு போய் மகனை அவள் கண்டு பிடித்தாள்; பிணமாய் அவன் கிடந்தான்; அவள் கத்தினுள்; கதறினுள்;புலம்பினுள்;பலன் ஒன்றும் இல்லை. மாண்டவன் மறுபடியும் பிழைப்பானு?

4. பின்பு பிணத்தை எடுத்துக் கொண்டு, சுடலைக்கு அவள் சென்ருள். சுள்ளி பொறுக்கினுள்; பிணம் சுட யத்தனித்தாள்; சுடலை காப்போன் கண்டுகொண்டான், "இங்கே கட்டணம் இல்லாமல் பிணம் சுடலாகாது; காற் பணம் செலுத்தவேண்டும்'' என்ருன். அவளிடத்தில் பணம் இல்லை. "பணம் வாங்காமல் சுடவிடேன்'' என்று அவன் சொல்லிவிட்டான். அவள் மனது சலங்கிற்று.

5. சுடலை காத்தவன் ஹரிச்சந்திரன். சென்றவள் அவன் மனைவி. ஒருவரையொருவர் அறிந்துகொண்டார்கள். தன் மகன் என்று தெரிந்தும் அவன் சுடவிடவில்லை. "பணம இல்லாமல் சுடேன்'' என்று சொல்லிவிட்டான். பணம் அவனுடைய ஆண்டானுக்கு உரியது.

6. ஹரிச்சந்திரன் ஒரு ராஜா. நாட்டை இழந்தான். மனைவியைவிற்ருன். தான் பறையனுக்கு அடிமையுமானுன். இவ்வித நிலைமையிலும் அவன் சத்தியம் தவறவில்லை. எவ்வித வறுமை வந்தாலும் செய்வன செய்யவேண்டும். ஆதலால்,

வறியோர்க்கழகு வறுமையிற்செம்மை.

---

15. உருவத்தை எண்ணி மலைக்கலாகாது.

[இரண்டு வித்வான்களின் சரிதம்.]

1. மதுரையில் ஒரு வித்வான் இருந்தான். அவன் பெயர் வித்வத்ஜன கோலாகலன். அவனிடத்தில் அரசன்

அன்பாய் இருந்தான். அரசன் ஒரு உத்தரவு செய்தான். அதன்படி அந்த வித்வானுக்கு அந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு வித்வானும் வரி செலுத்தவேண்டும். வரி தண்டுவதற்காக வித்வான் காரியக்காரனை நியமித்திருந்தான். ஒவ்வொரு ஊரிலும் வரி வசூலிப்பது அவன்வேலை.

2. காரியக்காரன் ஒரு ஊர் சேர்ந்தான். அந்த ஊர் வித்வான் அப்பொழுது வீட்டில் இல்லை. ஒரு சிறுவன் இருந்தான். காரியக்காரனிடத்தில் பையன் "குடிகள் அரசனுக்கு வரி கட்டுவது நீதி. வித்வானுக்கு வரிசெலுத்த நீதி இல்லை. இந்த வரி கொடுபடாது. போய் விடு. போய் உன் எஜமானனிடத்தில் சொல்லிவிடு" என்றான். காரியக்காரன் போய்விட்டான்.

3. வெளியே போயிருந்த வித்வான் வீடு அடைந்தான். நடந்த விபரம் தெரியவந்தது. வரி கொடாத வித்வானை வித்வத்ஜனன் வாதுக்கு இழுப்பான்; கடுமையான கேள்வி கேட்பான்; அதை விடுப்பது கஷ்டமாய் இருக்கும்; விடுக்காவிடில் தண்டனை விதிக்கப் பெறும். இதை அந்த ஊர் வித்வான் அறிந்தவன். அதை எண்ணி அவன் மனம் வருந்தினான். கவலை அடைந்தான்.

4. அந்த ஊரில் நடந்த விவரம் கோலாகலனுக்கு எட்டிற்று; அரசனுக்கும் எட்டிற்று; ஊர் வித்வான வாதுக்கு அழைக்கப்பெற்றான்: பல்லக்கும் ஊர் சேர்ந்தது; வித்வான் நடுங்கினான். அப்பொழுது பழைய சிறுவன் "நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; நானேசென்று சபை முன் அந்த வித்வத்ஜனனுடைய கொட்டத்தை அடக்கி வருகிறேன்" என்றான். பல்லக்கில் தான் ஏறிக்கொண்டான். உடனே பல்லக்கு மதுரை வந்து சேர்ந்தது.

5. பல்லக்கு ராஜவீதிவழியே சென்றது. ஒருமாளிகையின் மேல் மெத்தையில் அரசன் இருந்தான். சிறுவனை அவன் பார்த்தான்; சிரித்தான்; அதிசயித்தான், "இவனா வித்வஜனனை ஜெயிக்க வந்திருக்கிறான்?" என்றான். அரசன் தேவி அருகில் நின்றாள். "ஆம் இவனே ஜெயிப்பான்" என்று அவள் சொன்னாள். "பந்தயம் என்ன? என்று அரசன்கேட்டான். "இவன் தோல்வி அடைந்தால் தங்கள் வேலைக்காரிக்கு வேலைக்காரியாய் நான் இருக்கிறேன்" என்றாள். "இவன் ஜெயித்தால் என்நாட்டில்சமபாதி இவனுக்கு நான் தருகிறேன்" என்று அரசன் சொன்னான்.

6. பின்பு சபை கூடிற்று, அரசனும் வித்வான்களும் கூடினார்கள். சிறுவனை வித்வத்ஜனன் சில கேள்வி கேட்டான்; உடனே அவன் விடையளித்தான்; அதன்மேல் சிறுவன், 'ஆம், நான் உன்னை மூன்று கேள்வி கேட்கிறேன். அதற்கு நீ தகுந்த மறுமொழி சொல்லவேண்டும்' என்றான். அங்கீகரிக்கப்பட்டது. மூன்று கேள்விகள் கேட்டான். ஒன்றுக்கும் வித்வத்ஜனன் பதில் சொல்ல முடியவில்லை. அவன் தோல்வி அடைந்தான். அரசனது தேவி சபைக்கு ஓடினாள். "இவர் என்னை ஆளவந்தாரோ?" என்று அவனை அவள் கட்டிக்கொண்டாள். அதுமுதல் இச்சிறுவனுக்கு ஆளவந்தார் என்னும் பெயர் வந்தது. சொன்னபடி நாட்டில் பாதி சிறுவனுக்கு அரசன் அளித்தான்.

7. வித்வத்ஜனகோலாகலன் மகா லக்ஷணவித்வான். வயதிலும் மூத்தவன்; "கவிகளுக்கு அரசன்" என்று பெயர் பெற்றவன். ஆளவந்தார் சிறுவன். உபாத்தியாயர் வீட்டில் படித்துக்கொண் டிருந்தவன். வித்வானை ஆளவந்தார் ஜெயித்தார். அரசனும் கொண்டாடினான். என்றும் அழியாத பெயரையும், புகழையும் ஆளவந்தார் பெற்றார்.

8 உருவத்தை எண்ணி நாம் மலைக்கலாகாது. பனம் பழம் பெரிது. வாய்க்கும் அது உருசி; அதின் வித்திலிருந்து வளர்வது பனைமரம். அது ஓங்கி, உயர்ந்து வளர்கிறது. அப்படிக்கு இருந்தும் ஒருவர் தங்கவும் அது நிழல் கொடுப்பது இல்லை பனம்விதை பெரிதா யிருப்பதால் பயன் என்ன? ஆலம் விதையை நாம் பார்க்கும்போது அதன் வித்து சிறிது. சிறுமீன் முட்டையிலும் சிறிது. அதிலிருந்து வளரும் மரமோ வெகு பெரிது. அது ஓங்கி வளர்கிறது; நாலாபக்கமும் கிளை விடுகிறது. பெரிய சேனை தங்குவதற்கும் நிழல் தருகிறது. உருவத்தை எண்ணி, நாம் மலைக்கலாகாது. ஆதால்,

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.

தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே. ஆதலால்,
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

16. பிள்ளைகளின் இலக்ஷணம்.

[இரண்டு சகோதரிகளின் சரிதம்.]

1. ஒரு அரசனுக்கு இரண்டு பெண்கள்—சுந்தரி, குணசீலி. இருவரும் இரண்டு இராஜகுமாரர்களுக்கு மாலை இட்டார்கள். நீண்டகாலம் சென்றும் அவர்களுக்கு மக்கள் இல்லை. அம்பாளை அவர்கள் வேண்டினார்கள். அம்பாள் காட்சி அளித்தாள். "அழகிய பிள்ளை பதினாறு வேண்டுமோ! குணமுள்ள பிள்ளை ஒன்று வேண்டுமோ?" என்று கேட்டாள். "முன்னது வேண்டும்" என்றாள் சுந்தரி. "பின்னது வேண்டும்" என்றாள் குணசீலி. அவ்வாறே சுந்தரி பதினாறு பிள்ளைகள் பெற்றாள். எல்லோரும் அழகில் சிறந்தவர்கள். குணசீலி ஒரே ஒரு பிள்ளை பெற்றாள். அவன் அழகில்லாவிடினும் குணத்தால் சிறந்தவன் ஆனான். அவன் பெயர் குணசேகரன். பெயருக்குத்தகுந்த குணம்.

2. வயது ஏறிற்று, சுந்தரியின் பிள்ளைகள் வீரரும், சூரரும் ஆனார்கள். அவர்கள் வலிய சண்டைக்கு இழுப்பார்கள்; போர் செய்வார்கள்; பதினாறு பேரும் சேர்ந்து கொண்டால், எதிரி என்ன செய்ய முடியும்? அரசர்கள் நடுங்கினார்கள். குணசீலியின் மகன் நற்குணம் உள்ளவன். 'தாய்தந்தையரே தெய்வம்' என்று எண்ணுவான். எல்லோரையும் உடன்பிறந்தாராக நினைப்பான். இனியமொழி கூறுவான். அவனை எல்லோரும் நன்கு மதித்தார்கள்.

3. சுந்தரியின் பிள்ளைகள் தூரதேசம் சென்று திரும்பினார்கள். வழியில் ஒரு காடு. ஓர் இரவு அங்கே அவர்கள் தங்க நேர்ந்தது. பதினாறு பேரும் சேர்ந்திருந்தார்கள். இந்த விபரம் அந்த நாட்டு அரசனுக்கு எட்டிற்று. உடனே

அவன் சேனையுடன் காடு சேர்ந்தான். பதினறு பேரையும் வளைத்துக்கொண்டான். அயர்ந்து அவர்கள் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். வகை கேடாய் அவர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். பிடிபட்டார்கள். அரசன் கையில் சிக்கினர்கள். சிறையில் அடைபட்டார்கள்.

4. எட்டுவருஷம் அவர்கள் சிறையில் இருந்தார்கள். குணசேகரன் தன்னுடைய சகோதரர்களுக்காக அரசனிடம் பரிந்து பேசினன். அவர்கள் விடுபட்டார்கள். ஆனல் நன்றி கெட்டவர்கள். குணசேகரன்மேல் பொருமை கொண்டார்கள். அவர்கள் கெடுங்காலம் நெருங்கிற்று. அதனல் அவர்கள் கேடு நினைத்தார்கள். குணசேகரன் உயிரை வாங்க வழி தேடினர்கள். ஊராருக்கு இதுவிவரம் தெரிய வந்தது. உடனே அவர்கள் ஒன்று கூடினர்கள். பதினறு பேரையும் கொன்றுவிட்டார்கள்.

5. நீண்ட காலம் குணசேகரன் நாட்டை ஆண்டான். பதினறு பிள்ளைகள் பெற்ருள் சுந்தரி. ஒன்றும் பலன் இல்லை. அழகை அவள் மதித்தாள். அழகோடு அழகு போயிற்று. குணத்தை மதித்தாள் குணசீலி. நல் வாழ்வு வாழ்ந்தாள். குணமுள்ள பிள்ளைவேண்டும். ஒன்று இருந்தாலும் போதுமானது. வைத்ததெல்லாம் மரமாமா? பெற்றதெல்லாம்பிள்ளையாமா? உற்றதெல்லாம் உறவாமா? இது ஒரு பழமொழி. ஆதலால்,

பெற்ருேரெல்லாம் பிள்ளைகளல்லர்.
உற்ருேரெல்லா முறவினரல்லர்.

17 பெண்சாதியின் இலக்ஷணம்.

[திருவள்ளுவர் மனைவி சரிதம்.]

1. புருஷனும் பெண்சாதியும் மனம் ஒத்து வாழ வேண்டும். நடக்கவேண்டிய விதிப்படி அவர்கள் நடக்க வேண்டும். இதற்கு இல்லறம் என்று பெயர். 'இல்' என்பது வீடு; 'அறம்' என்பது தருமம், கடமை. வீட்டில் இருந்து தருமம் நடத்துவது இல்லறம். வீடுவாசல், பெண் சாதி, பிள்ளைகளை விட்டு இருப்பவன் சன்னியாசி, அவன் வாழ்வு துறவறம் எனப்படும். இல்லறத்தை விட்டவன் துறவி. 'துறவறத்தைவிட இல்லறமே சிறந்தது' என்பர்.

2. "இல்லறம் மேலோ, துறவறம் மேலோ" என்னும் சந்தேகம் ஒருவருக்கு உண்டாயிற்று. அவர் பெரியவர். தெரிந்து கொள்ள அவர் விரும்பினர். ஊரூராய் அவர் போனர். வீடுவீடாய் அவர் பார்த்தார். கடைசியாய்த் திருவள்ளுவர் வீடு அவர் சேர்ந்தார். வள்ளுவர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர். தகப்பன் பிராமணன். தாயார் நீச ஸ்திரீ. வள்ளுவர் கல்விமான்; அறிவு உடையவர். அவர் வீட்டில் பெரியவர் சிலநாள் இருந்து வந்தார்.

3. ஒருநாள் பழைய அன்னம் வள்ளுவர் உண்டு கொண்டிருந்தார். அப்பொழுது தம்முடைய மனைவியை அவர் அழைத்தார். "இந்த அன்னம் சூடு கொதிக்கிறது; சூடு தாங்கமுடியவில்லை. விசிறி கொண்டு இதை விசிறு" என்றார். அந்த அம்மணி அப்படியே செய்தாள்.

4. வள்ளுவர் துணி நெய்வது உண்டு. ஒரு நாள் அவர் துணி நெய்துகொண்டு இருந்தார். வெளிச்சமான இடத்தில் அவர் இருந்தார். அது உச்சி வேளை; கோடை

காலம்; வெய்யில் தகித்துக்கொண்டிருந்தது. எங்கும் ஒரே வெளிச்சமாய் இருந்தது. அப்பொழுது வள்ளுவர் தம்முடைய மனைவியை அழைத்தார். "எங்கும் ஒரே இருட்டாய் இருக்கிறது. தீபம் ஏற்றிவை" என்றார். அந்த அம்மணி அப்படியே செய்தாள்.

5. ஒருநாள் வள்ளுவர் தம் வீட்டு வாசலில் இருந்தார். அங்கிருந்து தம்முடைய மனைவியை அழைத்தார். அப்பொழுது அந்த அம்மாள் வீட்டில் பின்புறம் இருந்தாள். கிணற்றிலிருந்து நீர் இறைத்துக்கொண் டிருந்தாள். செம்பு கிணற்றின் நடுவில் வந்துவிட்டது. அப்பொழுது புருஷன் குரல் அவள் காதில் விழுந்தது. அப்படியே கயிற்றை அவள் விட்டாள். புருஷனிடம் சென்றாள்.

6. செம்பு கயிற்றோடு தொங்கிற்று. கிணற்றில் விழ இல்லை. அந்தரமாய் அது நின்றது. பெரியவர் பார்த்தார். "இப்படிப்பட்ட பெண்சாதி கிடைத்தால் இல்லறம் மேலானது" என்று தெரிந்துகொண்டார். சந்தேகம் தெளிந்தது. அவர் போய்விட்டார். புருஷன மனம் கோணாமல் எவள் நடக்கிறாளோ, அவள்தான் பெண்சாதி ஆவாள். மற்ற பெண்களெல்லாம் பேய்கள். ஆதலால்,

கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.

---

18. இயற்கையான நல்ல குணம் மாறாது.

[குமணன் சரிதம்.]

---

1. குமணன் என்பவன் ஒரு அரசன். அவன் நல்லவன்; குடிகளுக்கு எப்பொழுதும் நன்மை செய்பவன்; அவன் கல்விமான்; கவி பாடுவோ ரிடத்தில் அவனுக்கு

அன்பு மிகுதி; அவர்களுக்கு அவன் வெகுமதி அளிப்பான். அவனுக்கு ஒரு தம்பி. தானாய் ஒன்றும் செய்ய அவன் அறியான். பிறர்சொல்லை அவன் கேட்பான், அவ்வாறே நடப்பான். கெட்ட சிநேகதர் பலர் அவனுக்கு உண்டு. அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். "உன் தமயன் உயிரை வாங்கிவிடு. அப்போது நீ அரசன் ஆவாய்; உன் கை எப்பொழுதும் மேலானதாய் இருக்கும்" என்றார்கள். அவனும் உடன் பட்டான். அந்த விவரம் குமணனுக்கு எட்டிற்று. அவன் மனம் நொந்தது. வாழ்வு சதமல்ல என்று எண்ணினான். ஒருவருக்கும் தெரியாமல் அவன் தூரதேசம் போய்விட்டான். அங்கே ஒரு வனத்தில் இருந்துவந்தான்.

2. கல்விமான் ஒருவன். அவன் ஏழை. ஒரு நாள் "நான் ஏன் வருந்தவேண்டும்? அரசனிடம் செல்வேன். கவி பாடுவேன். வெகுமதி பெறுவேன்" என்று சொல்லி, அவன் புறப்பட்டான்; ராஜநகரம் சேர்ந்தான். குமணன் அங்கு இல்லை; அமணன இருந்தான்; வீணருக்கு அவன் வழங்குவான்; கவிகளை அவன் விரும்புவது இல்லை; கவி துக்கம் அடைந்தான்; வெறுமையாய் வீடுபோக அவனுக்கு மனம் இலலை. ஊராரிடம் விசாரித்து அறிந்தான்.

3. குமணன் இருந்த வனத்தை அவன் அடைந்தான். அரசனுக்கு வந்தன வழிபாடு செய்தான், கவி ஒன்றுபாடினான், குமணன் கேட்டான், ஆனந்தம் பெற்றான். அவன் என்னசெய்வான்? கையிலோ பொருள் இல்லை. துக்கம் அவனுக்கு உண்டாயிற்று. "கவிஞரே! பரிசு உமக்கு அளிக்க எனக்கு மனமே. ஆனால் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை. என் தலைக்கு ஆயிரம் வராகன் கொடுப்பதாக என் தம்பி சொல்லி இருக்கிறானாம். என்

தலையை நீர் கொண்டுபோம். பலனை அடையும்." என்று அரசன் சொன்னான். இதை யார்தான் சம்மதிப்பார்?

4. கவி போய்விட்டான். குமணன் தலைபோல் ஒன்று செய்வித்தான்; அதற்கு வருணம்வைத்தான்;இரத்தம் பெருகுவதுபோல் ஏதோ செய்வித்தான்; அமணனிடம் கொண்டுபோனான். கண்டதும் அவன் மனம் தவித்தது. "கவிஞரே! என் தமயன் தலையை நீர்கொண்டுவந்தீர்; நான் சொன்னபடி ஆயிரம் வராகன் கொடுத்துவிடுகிறேன். அவரையே கொண்டுவந்தால் 'ஐயாயிரம்' வராகன் தருவேன்'' என்று சொன்னான். அப்படியே நடந்தது. அண்ணனுக்கும், தம்பிக்கும் நேசம் உண்டாயிற்று. குமணன் நாட்டை ஒப்புக்கொண்டான். அமணன் நாட்டுக்கு மந்திரியாய் இருந்தான். தன் துஷ்ட சிநேகிதர் ஓடிவிட்டனர்.

5. "தலை போனாலும் போகட்டும். பிறருக்கு அது உபயோகப்பட்டால் போதுமானது" என்று குமணன் எண்ணினான். இப்படி எண்ணுபவர்தான் ; ஈகையாளர். கொடுக்கும் கை கொடுக்கவே சொல்லும். என்ன கஷ்டம் வந்தாலும் கொடையாளியின் குணம் மாறாது.

அடினு மாவின்பால் தன்சுவை குன்றாது.
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
அரைக்கினும் சந்தனம் தன்மண மாறாது.
கலக்கினுந் தண்கடல் சேறா காது.

19. இயற்கையான கெட்ட குணம் மாறாது.

[நாயின் போக்கு.]

---

1. ஒரு வனத்தில் தவசி ஒருவர் இருந்தார். அவர் பெயர் அனுபமர். அவர் சாந்தம் உள்ளவர். காட்டு மிருகங்களுக்கு அவரிடத்தில் பயம் இல்லை. ஒரு நாள் குச்சு நாய் ஒன்று அவரிடம் சென்றது. அது களைத்திருந்தது. வயிறு ஒட்டியும் இருந்தது. அதை அவர் பார்த்தார் இரக்கம் கொண்டார்; இரை அளித்தார். அதை அது தின்றது; வாலை ஆட்டிற்று; நன்றி பாராட்டிற்று; அவரிடத்திலேயே அது இருந்தது. அவரும் அன்புகாட்டி வந்தார். அது பசியாமல் உண்டு வளர்ந்தது.

2. நாய் பெருமை அடைந்தது. காட்டுமிருகங்கள் பொறாமை கொண்டன. அவை சபை கூட்டின. நாயின் உயிரை வாங்கிவிட அவை தீர்மானஞ் செய்தன. முதலில் வேங்கை ஒன்று சென்றது. பார்வைக்கு அது பயங்கரமாய் இருந்தது. நாய்க்கு நடுக்கம் எடுத்தது. உடனே அது தவசியிடம் ஓடிற்று; காலில் விழுந்தது; அவரும் கண்டார்; பரிதாபம் கொண்டார். உடனே நாயின் உருவத்தை மாற்றினர். நாய் பெரிய வேங்கையாக நின்றது. காட்டுவேங்கை பார்த்தது; கலக்கம் அடைந்தது; மெள்ள மெள்ள நகர்ந்து பின்சென்றது; ஓட்டம் பிடித்தது.

3. பின்பு ஒரு யானை சென்றது. அதை நாய் வேங்கை பார்த்தது; வேங்கைக்கு யானை சத்துரு. வேங்கை திகில் கொண்டது; தவசியிடம் ஓடிற்று; காலில் விழுந்தது; பெரிய யானையாக அவர் வேங்கையை ஆக்கினர்.

காட்டுயானை பயந்து ஓடிற்று. பின்பு ஒரு சிங்கம் சென்றது. சிங்கத்தின் தொனி கேட்டால் யானைகள் நடுங்கும். நேரில் பார்த்துவிட்டால், என்ன பாடு படாது? தவசியிடம் பொய்யானை ஓடிற்று; அவர் காலில் விழுந்தது. அதை ஒரு பெரிய சிங்கமாக அவர் ஆக்கினார். அது அதை எதிர்த்தது. மிருகேந்திரன் பயந்து ஓடிற்று.

4. பின்பு ஒரு சரபம் பறந்து வந்தது. சிங்கம் பார்த்தது. உயிர் தப்ப வழி இல்லை. உடனே தவசி காலில் அது விழுந்தது. அவர் ,அதையும் ஒரு சரபமாக்கினார். வந்த சரபம் வந்த வழியே போயிற்று. நாய் சரபமாகவே இருந்துகொண்டிருந்தது. அதற்கு மேலானது இல்லை. அது கருவம் கொண்டது. ஒருநாள் அது நன்றி மறந்தது. "இவர் சக்தி உள்ளவர். நான் நாயாக வந்தேன். இப்பொழுது சரபமாக இருக்கிறேன். அது இவராலேதான். கோபம் இவருக்கு வருமானால், என்னை என்ன செய்வாரோ! இதற்கு என்ன செய்கிறது! இவர் உயிரை வாங்கி விடுவது நல்லது; இதுதான்யோசனை" என்று எண்ணினது.

5. ஒருநாள் தவசி படுத்திருந்தார். சரபம் அருகில் இருந்தது. அவர் தூங்கி விட்டதாக அது எண்ணிற்று. கொலை செய்ய யோசித்தது. தவசி அதை அறிந்துகொண்டார். நாயே! என்ன யோசனை செய்கிறாய்?" என்று கேட்டார். சரபம் நாயாயிற்று. கீழ்மக்கள் குணம் மாறாது.

அடினும் பால்பெய்து கைப்பறாதுபேய்ச்சுரைக்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாதே. [காய்

---

20. பெரியோர் நட்பு.

[ஹநுமத் ஸமேத ஸ்ரீராமர்சரிதம்.]

---

1. கிஷ்கிந்தை என்பது ஒரு பட்டணம். அதை வானரர் ஆண்டுவந்தார்கள். அவர்களுக்கு அரசன் வாலி. அவனுக்கு ஒரு தம்பி. அவன் பெயர் சுக்ரீவன். அவன் போக்கு மூத்தவனுக்கு வெறுப்பாய் இருந்தது. நாட்டிலிருந்து சுக்ரீவன் ஓடினான். அவனுடன் அவன் மந்திரியும் ஓடினார். அவர் பெயர் அநுமார். இருவரும் ரிசியமுக பர்வதம் சேர்ந்தார்கள். அங்கே அவர்கள் ஒரு குகையில் தங்கி இருந்தார்கள். அங்கு வாலி போக முடியாது.

2. ஒரு நாள் அந்த மலையின் பக்கமாய் இருவர் சென்றார்கள். இருவரும் வாலிபர். அவர்கள் வரவைச் சுக்ரீவன் கண்டான். அஞ்சினான். பிராணபயம் கொண்டான். அவர்கள் இன்னார் என்பதை விசாரிக்க அநுமார் சென்றார். தாம் இன்னார் என்பதை அவருக்கு அவர் தெரிவித்தார். "நீங்கள் யாவர்?" என்று விசாரித்தார்.

3. அவர்களுள் ஒருவர், "வடக்கே அயோத்தியாபுரி என்றொருபட்டணம் உண்டு. அதைச் சூரியகுல அரசர்கள் ஆண்டு வருகிறார்கள். அவர்களுள் ஒருவர் தசரதர். அவர் சக்ரவர்த்தி. அவர் மக்கள் நாங்கள். என்பெயர் ராமன். இவன் என் தம்பி. இவன் பெயர் லக்ஷ்மணன். என்னுடன் என் மனைவியும் வந்தாள். அவளை ராவணன்கொண்டு போய் விட்டான். தேடி நாங்கள் வருகிறோம்" என்று சொன்னார். அநுமார் கேட்டார்; ஆனந்த மடைந்தார்.

4. ஒருவரை ஒருவர் கண்டமாத்திரத்தில் இருவருக்கும் சிநேகம் பிறந்தது. ஒருவர் சொல்லை ஒருவர் நம்பினார்.

ஒருவருக்கு ஒருவர் உதவ எண்ணம் பிறந்தது. அப்படியே நடந்தது. வாலியை ஸ்ரீராமர் கொன்ருர். சுக்ரீவன் பட்டம் அடைந்தான். சீதை இருந்த இடத்தை அநுமார் அறிந்து வந்தார். ராவணனுக்கும், ஸ்ரீராமருக்கும் போர் நடந்தது. ஸ்ரீராமருக்கு அநுமார் துணை நின்ருர். அவர் வெற்றி அடைந்தார். சண்டையில் ராவணன் மாண்டான். சீதை ஸ்ரீராமரிடம் திரும்பவும் சேர்ந்தாள்.

5. சிறிது பொழுதுதான் ஸ்ரீராமரும், அநுமாரும் பழகினர்கள். இருவரும் பெரியோர். அவர்கள் சிநேகம் வேர் கொண்டது. வரவர அது வளர்ந்தது. உலகம் உள்ளமட்டும் அவர்கள் பெருமை நிலைக்கலாயிற்று.

ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

21. மூர்க்கர் நட்பு.

[துரியோதனனும் விதுரநும்.]

1. துரியோதனன் சந்திரகுலத்து அரசன். பாண்டவருக்கு அவன் பங்காளி. காட்டுக்கு அவர்களை அவன் அனுப்பிவிட்டான். குறித்தகாலம் முடிந்தது. பாண்டவர்கள் தங்கள் நாட்டை வேண்டினர்கள். கிருஷ்ணன் அங்கு தூது சென்ருர். துரியோதனன் அவரை இழிந்து பேசினன். 'நாடு கொடுப்பது இல்லை' என்று அவன் சொல்லிவிட்டான். கிருஷ்ணன் கோபம் கொண்டார். விதுரர் வீட்டில் அவர் இரவு தங்கினர். மறுநாள் போய்விட்டார்.

2. மறுநாள் துரியோதனன் சபை கூட்டினன். விதுரரை அவன் வரவழைத்தான். "கிருஷ்ணன் இடையன்;

இடையனுக்கு நீர் இடம் கொடுத்தீர். நியாயம் யாதோ?'' என்றான் .அதற்கு அவர், "அவர் பெருமையை நீ அறியாய். நீ வீணாய் ஏன் பிதற்றுகிறாய்?'' என்றார்.

3. துரியோதனன் கோபம் கொண்டான். விதுரரை இழிந்து பேசினான். கோபம் அவருக்குப் பிறந்தது. "நீ மூர்க்கன். எத்தனையோ வருஷமாய் என்னோடு பழகிவந்திருக்கிறாய். பாண்டவரை எப்பொழுதும் கெடுத்து வருகிறாய். நீ சத்தியம் தவறுகிறவன். நல்ல சிந்தை இல்லை. நீ பாண்டவரோடு போர் செய்வாய். நான் உன் பக்கம் சேரமாட்டேன். நான் உன் அன்னத்தை உண்டுவந்திருக்கிறேன். நான் அவர்களுக்கு உதவுவது தருமம் ஆகாது. என் வில் இதோ இருக்கிறது. இதை நான் ஒடித்து விடுகிறேன்'' என்று அவர் சொன்னார். அப்படியே செய்தார். விதுரர் உதவியை அரசன் இழந்தான்.

4. இருவரும் சிறு பிள்ளை முதல் பழகி வந்தவர்கள். துரியேதனன் மூர்க்கன். சிநேகம் செய்வதற்கு அவன் தகுந்தவன் அன்று. மூர்க்கத்தால் விதுரரை இழிவாய் அவன் பேசினான். அதனால் அவர் சிநேகத்தை இழந்தான். உதவியையும் இழந்தான். மூர்க்கனுடைய சிநேகம் எப்போதும் நீடித்து நில்லாது. ஆதலால்,

நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை;
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

22 பெருங்குற்றம் செய்யலாகாது.

[சுகந்தனும், அவன் மகனும்]

1. தமிழ் நாட்டின் கீழ்க்கரை ஓரமாய் ஒரு பெரிய பட்டினம் இருந்தது. காவிரி ஆறு கடலில் சேரும் இடத்தில் அது இருந்தது. அதன் பெயர் காவிரிப்பூம் பட்டினம். 'காவேரிப்பட்டணம்' என அதை அழைப்பதும் உண்டு. பட்டணத்தார் என்றும் பட்டினத்துப்பிள்ளை என்றும் சொல்லுகிறார்கள். அவர் அந்த ஊரார்தான். காவேரிப் பட்டணத்தை ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் சோழ அரசர்களுள் ஒருவன். பெயர் சுகந்தன்.

2. சுகந்தன் நீதி தவறாதவன். குற்றம் செய்பவர் எவராயிருந்தாலும் அவரை அவன் உடனே கண்டிப்பவன். அந்த ஊரில் சத்தியம் நிலை நின்றது. குடிகள் பயம் இல்லாமல் வாழ்ந்தார்கள். நாட்டில் குறை ஒன்றும் இல்லை.

3. ஒருநாள் ஒரு ஸ்திரீ ஸ்நானம் செய்ய ஒரு குளம் சேர்ந்தாள். அப்பொழுது அங்கே வேறு எவரும் இல்லை. அரசனுடைய குமாரன் ஒளிந்திருந்தான். திடீரென்று அவனும் குளம் சேர்ந்தான். அந்த ஸ்திரீமேல் அவன் ஆசைகொண்டிருந்தவன். அந்த எண்ணத்தை அவன் வெளியிட்டான். அந்த அம்மணி அதற்கு உடன் படவில்லை. கோபம் அவனுக்கு உண்டாயிற்று. வெட்கமும் உண்டாயிற்று. தான் வந்த விபரம் எவருக்கும் தெரியாமல் அவன் போய்விட்டான். அந்த ஸ்திரீ மனம் நொந்தாள். தாமதம் செய்யாமல் வீடு அடைந்தாள்.

4. நடந்த விவரத்தை ஒருவரும் அறியார். அது வெளிப்பட வழி இல்லை. அப்படியானால் தீங்குசெய்தவன்

தண்டனை பெறுவது எப்படி? எப்படியோ சங்கதி அரசனுக்கு எட்டிற்று. அந்த அம்மணியை வரவழைத்து விசாரித்தான். அவள் வாய் திறவாமல் இருந்தாள். தன் மேல் ஒருவனுக்கு ஆசை உண்டானதினாலே "தான் பதிவிரதை யல்ல" என்று அவள் எண்ணினாள்.

5. அரசன் சபைகூட்டினான். தன் மகனை அங்கே வரவழைத்தான். குற்றத்தை அவன் ஒப்புக்கொண்டான். தன்புத்திரன் தலையை வெட்டி விடும்படி அரசன் கட்டளை இட்டான். கட்டளையும் உடனே நிறைவேறிற்று.

6. சிறுவர்கள் குற்றம் செய்வது உண்டு. அது அற்பமானதாய் இருந்தால் பெற்றோர்கள் பொறுப்பார்கள். மற்றோரும் மன்னிப்பார்கள். குற்றம் பெரிதாய் இருந்தால் அப்படி மன்னிக்கும் வழக்கம் இல்லை. மேற்கண்ட சுகந்தன் போக்கை யோசியுங்கள். அவன் அரசன் குற்றவாளி அவன் மகன் பெருங்குற்றத்தை மகன் செய்தான். அதை அரசன் பொறுக்க இல்லை. 'மகன்' என்றும் பாராமல் அவனை வெட்டிவிட அரசன் உத்திரவுசெய்தான். அதுதான் செங்கோன் முறைமை என்பது. ஆதலால்,

சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடமை.
சிறியோ ரப்பிழை செய்தன ராயில்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

---

23. பெருமைக்கு மூலம் அடக்கம்.

[இரண்டு இராஜ குமாரர்கள் சரிதம்.]

---

1. கோணபுரி என்பது ஒருபட்டினம். அதைச் சர்வோத்தமன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். இருவரும் கல்வி கற்று வந்தார்கள். வயது ஏறிற்று. தேச சஞ்சாரம் செய்ய இருவரும் எண்ணம் கொண்டார்கள். அரசனும் அனுமதி அளித்தான்.

2. இருவரும் சேர்ந்து செல்ல இல்லை. இளையவன் வடதேசம்சென்றான். மூத்தவன் தென்தேசம் சென்றான். மூத்தவன் கருவம் கொண்டான். எவரையும் அவன் மதிப்பது இல்லை. "தான் இராஜகுமாரன் என்றும், தன்னிலும் மேலானவர் இல்லை" என்றும் அவன்பெருமை பாராட்டினான். இளையவனோ அப்படியன்று. எவரிடத்திலும் அவன் அன்பாய் இருப்பான். 'ஏழை' என்று அவன் அவமதிப்பது இல்லை. எவரோடும் அவன் பேசுவான். பெருமை என்பதே ஒரு சிறிதும் அவனுக்கு இல்லை.

3. நாம் ஒருவரைமதித்தால் நம்மை அவரும் மதிப்பார். நாம் ஒருவரை அவமதித்தால் நம்மை அவரும் அவமதிப்பார். நாம் பிறர் மதிப்பை விரும்பினால் நாம் பிறரை மதிக்கவேண்டும். இந்த விபரத்தை இளையவன் அறிந்திருந்தான். மூத்தவன் இந்த முதுரையை மதிக்க இல்லை.

4. பெருமை பாராட்டுதல் பொருளுக்கு நாசம். மூத்தவன் சென்ற இடத்தில் எல்லாம் பெருமை பாராட்டினான். அதனால் செலவு மேலிட்டது. அவன் கொண்டு சென்ற பொருள் ஆய்விட்டது. செலவுக்கு அவன் வருந்தலானான். பெருமையை இளையவன் தேட இல்லை. அது

தானே வந்தது. அவன் அன்பு பாராட்டினன். எல்லோரும் அவனை மதித்தார்கள். சென்ற இடமெல்லாம் அவன் சிறப்பு அடைந்தான். அரசர்களுங்கூட அவன் போக்கை மெச்சினர்கள். அவன் எல்லோருக்கும் நல்லவன் ஆனன்.

5. ஊரை நோக்கி மூத்தவன் திரும்பினன். கையில் பணம் இல்லை. ஊரூராய் அலைந்து சலித்து, அவன் மனம் நொந்தான். அவன் தன்னூர் சேர்ந்த மறுநாள் பின்னவனும் சேர்ந்தான். அவனுடன் பெருங்கூட்டம் சென்றது. அவன் பெருமையை வித்வான்கள் கொண்டாடினர்கள். பிறதேசத்து ராஜகுமாரர் நால்வர் உடன் சென்றார்கள். அங்கங்கே தான் பெற்ற மரியாதைகளையும் அவன் அரசனிடத்தில் சொன்னன். அரசன் ஆனந்தமடைந்தான்.

6. பெருமை தன்னலேயே உண்டாவதாகும். இழிவும் அப்படியே. பெருமை கொடுத்தால் பெருமை வரும். சிறுமை கொடுத்தால் சிறுமை வரும். அது "கொடுக்கல் வாங்கல் வியாபாரம்" ஆதலால்,

பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

---

24. கற்பது கடமை.

[சாப்பாட்ரோமன் ராமகவி ஆனது.]

---

1. பெருங்கோழுப்பாக்கம் என்னும் ஓர் ஊர். அதில் ராமன் என்போன் ஒருவன். அவன் அளவுக்கு மிஞ்சி உண்பான். ஒவ்வொருநாளும் அவன் பலமுறை உண்பான். அதிகமாகவும் உண்பான். பேருண்டி தேடுவான். நல்ல உணவு விரும்புவான். சாப்பாட்ரோமன் என்னும் பெயர் அவனுக்கு இடப்பட்டது. அப்படியே அழைத்தார்கள்.

2. ராமன் ஏழை. வேண்டிய உணவு அவனுக்கு அகப்படுவது இல்லை. அதுத்து அந்த ஊரை அவன் விட்டான். கவித்தலம் என்னும் ஊர் சேர்ந்தான். அது ஓர் சிற்றூர். கல்விமான்கள் அங்கே மிகுதி. அவர்களை அந்த ஊரார்மதித்தார்கள். உபசரித்தார்கள். சாப்பாட்டுராமனை விசாரிப்பவர் அங்கே இல்லை. அவன் மனம் நொந்தது.

3. "ஐயோ! கல்வி கற்றிருந்தால் வருந்தாமல் உண்ணலாமே" என்று அவன் விசனப்பட்டான். அவன் படிப்பில்லாதவன். அப்பொழுது அவனுக்கு வயது இருபது. கல்வி கற்க அவன் நோக்கம் கொண்டான். அந்த ஊரில் ஒரு கல்விமான். அவரிடம் அவன் சென்றான். "நீ யார்?" என்று அவர் கேட்டார். "என் பெயர் ராமன். உண்டியில் எனக்கு விருப்பம் மிகுதி. அதனால் 'சாப்பாட்டு ராமன்' என்று ஊரார் என்னை அழைப்பது உண்டு. 'இழிவாகிய பெயர் என்னைவிட்டு விலகும்படி செய்யவேண்டும்" என்று சொல்லி, அவர் காலில் அவன் விழுந்தான். அவருக்கு அவன்மேல் இரக்கம் பிறந்தது.

4. பிச்சை எடுக்க அவன் ஆரம்பித்தான். உபாத்தியாயர் வீட்டில் இருப்பான். தொண்டு செய்வான். காலால் இட்டதை அவன் கையால் செய்வான். கல்வியும் கற்று வந்தான். வரவர அவனிடத்தில் கல்விமானுக்கு அன்பு பிறந்தது. கருத்தோடு அவன் படித்து வந்தான்.

5. இரண்டு வருஷம் அவன் கல்வி பயின்றான். எப்பொழுதும் படிப்பிலேயே ஞாபகம் சென்றது. பேருண்டி ஆசை ஒழிந்தது. கல்வி அவனுக்கு ஏறிற்று. உபாத்தியாயர் அதை அறிந்தார். அவருக்கு மகிழ்ச்சி பிறந்தது.

அந்த நாட்டு அரசனிடம் அவர் சென்றார். சாப்பாட்டு ராமன் திறமையை அவனுக்கு அவர் தெரிவித்தார்.

6. அரசன் சபைகூட்டினான். கல்விமான்களை அதற்கு அவன் வரவழைத்தான். கவித்தலம் உபாத்தியாயரும் சென்றார். சாப்பாட்டு ராமனும் சென்றான். சபைகூடிற்று. கல்விமான்களை அரசன் பார்த்து "ஒவ்வொருவரும் ஒவ்வொரு கவி பாடவேண்டும். கீழே கையொப்பம் செய்ய வேண்டும். பார்த்து நாம் பரிசளிப்போம்" என்றார். கல்விமான்கள் அரசன் கட்டளைப்படி நடந்தார்கள்.

7. கவிகள் எல்லாம் அரசன்முன் வைக்கப்பட்டன. அவைகளுள் ஒன்று அழகாய் இருந்தது. அதன் கீழ் ராமன் என்று எழுதியிருந்தது. அரசன் அதை எடுத்துக் கொண்டான். "ராம கவி யார்" என்று விசாரித்தான். சாப்பாட்டு ராமனே அவர் என்று தெரிய வந்தது. அரசன் வெகுமதி அளித்தான். அரண்மனை வித்வான்களுள் ஒருவராக ராமகவியை அரசன் நியமித்தான். கல்வி கற்பது நன்று. அதில் சந்தேகமே இல்லை. பிச்சை எடுத்தாலும் கல்வி கற்பதை விடலாகாது. ஆதலால்,:

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

---

25. கல்வியின் பெருமையே பெருமை.

[அழகன் சரிதம்.]

---

1. சிவபுரம் என்பது ஒரு நகரம். அதை ஒரு அரசன் ஆண்டு வந்தான். வித்வத்சபை ஒன்று அங்கே இருந்

தது. வித்வத்சபை என்பது கல்விமான்கள் கூட்டம். அவர்களுள் சிறந்தவர் ஒருவர் இருந்தார். உயர் குலத்தில் பிறந்தவர். அவர் உயர்ந்த கல்வி கற்றவர். அவருக்கு விசேஷ சன்மானம் அரசன் செய்து வந்தான்.

2. அந்த வித்வான் நோயாளி ஆனார். படுத்த படுக்கையை விட்டு எழுந்து நடமாட அவர் முடியாமல் இருந்தார். அரசன் அவரிடத்தில் அன்பாய் இருந்தான். அதை எண்ணி, அவருக்கு உரிய மரியாதை எல்லாம் அவருடைய பிள்ளைக்கு வழங்கி வந்தான். பிள்ளை பெயர் அழகன். அவன் அழகில் சிறந்தவன். பெயர் நல்ல பொருத்தம். அவன் படிப்பு இல்லாதவன். பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளுக்கு அவன் கீழானவன். அடுத்த நாட்டு அரசன் தன் புத்திரனுக்கு விவாகம செய்வித்தான். சிவபுரி வித்வத் சபையாரை அவன் வரவழைத்தான்.

3. இரண்டு நாட்டு வித்வான்களும் சபை கூடினர்கள். அழகனும் கூட இருந்தான். பல நாட்டரசரும் சென்றார். வித்வான்கள் பல வகுப்பாக வகுக்கப்பட்டார்கள். இலக்கண வித்வான்கள் ஒருபுறமாய் இருந்தார்கள். இலக்கிய வித்வான்கள் ஒரு புறமாய் இருந்தார்கள். அழகனுக்கோ இலக்கணமும் தெரியாது. இலக்கியமும் தெரியாது. "நான் சிவபுர வித்வத்சபா நாயகருடைய புத்திரன்" என்று அரசனிடத்தில் அழகன் சொன்னான். அதற்கு அவர் "இது வித்வான்கள் சபை. அவர்கள் புத்திரர் சபை அன்று. நீர் உயர்ந்த குலம். குலத்தின் பெருமையை அறிவதற்காக இங்கே சபை கூடவில்லை. இது சாதிபற்றிய சபை அன்று. அவரவர் பெற்றிருக்கும் அறிவை அறிவதற்காக இப்பொழுது சபை கூடப்பட்டிருக்

கிறது. கல்வியில் திறமை உமக்கு இருந்தால் நீரும் அவர்களுடன் சேரலாம். வித்வான் புத்திரன் என்று நீர் சொல்லுகிறீர். அப்படிப்பட்டவர்களுக்காக ஏற்பாடு ஒன்றும் ஏற்படவில்லை. நீர் தனியே வந்தால் அதற்காக மரியாதை செய்யலாம்'' என்று சொன்னான்.

4. அழகன் வெட்கம் அடைந்தான். தனியான வெகுமதிக்கு அவன் காத்திராமல் ஊர் சென்றான். குலத்தின் பெருமையே பெருமை ஆகாது. முதல் ஜாதியான் ஒருவன் படிப்பில்லாமல் இருப்பதாக எண்ணிக்கொள்வோம். தாழ்ந்த ஜாதியான் ஒருவன் படிப்பு உள்ளவனாகவும் எண்ணிக்கொள்வோம். முதல் ஜாதியான் தாழ்ந்த ஜாதியானுக்கும் கீழ் ஆவான். ஆதலால்,

கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லி னுட் பிறந்த பதரா கும்மே
நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னயின் கீழிருப் பவனே.

---

26. குலத்திலும் கல்வி மேலானது.

[திருவள்ளுவர் சரிதம்]

---

1. வள்ளுவர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர். தகப்பனார் பிராமணர். தாயார் நீச ஸ்திரீ. சிறு வயதிலேயே அவர் கல்வி கற்றார். வயது ஏற ஏற அவர் பெருமை பரவியது. பிராமணர்களும் அவரை மதித்தார்கள். அவர் ஒரு நூல் எழுதினார். 'குறள்' என்னும் பெயர் அதற்கு இடப்பட்டது. எல்லா நூலுக்கும் அது மேலானதாகவே

இருந்தது. அது "அருள்வாக்கு அதாவது தெய்வ வாக்கு" என்றே சொல்லவேண்டும்.

2. வள்ளுவர் காலத்தில் மதுரையில் சங்கம் இருந்தது. சங்கம் ஒரு நூலை ஒப்புக்கொண்டால், தமிழ் நாடு அதை ஒப்புக்கொள்ளும். சங்கம் ஒரு நூலை ஏற்காவிட்டால், தமிழ்நாடு அதை ஏற்காது. இதை வள்ளுவர் அறிந்தார். தம்முடைய நூலை அவர் அரங்கேற்ற எண்ணினார். அதற்காக மதுரைக்கு வள்ளுவர் சென்றார்.

3. சங்கம் என்பது வித்வான்கள் கூட்டம். அவர்கள் ஒரு பலகைமேல் கூடுவார்கள். பலகை ஒரு குளத்தில் மிதக்கும். குளத்தின் பெயர் பொற்றாமரை. சங்கத்தில் ஒரு வித்வான் சேரவேண்டுமானால் பலகை அவனுக்கு இடம் கொடுக்கவேண்டும். கொடாவிட்டால் சங்கத்தாரோடு அவன் சேரமுடியாது. பலகை இடங்கொடுத்தால் "கடவுள் வித்வானை ஒப்புக்கொண்டார்" என்பது முடிவு.

4. வள்ளுவர் நீசன். நீசனை மேன்குலத்தார் தங்களோடு சேர்த்துக்கொள்வாரா? பொற்றாமரையின் கரை ஓரமாய் வள்ளுவர் நின்றார். உடனே பலகை இடம் கொடுத்தது. சங்கத்தில் அவர் ஒருவரானார். குறள் அருமையான நூல். எந்நாட்டுக்கும், எந்தவகுப்பாருக்கும், எந்த மதத்திற்கும், மூன்று காலத்துக்கும் அது பொருந்தும். குறள் திருக்குறள் என்னும் பெயர் பெற்றது. வள்ளுவர் திருவள்ளுவர் ஆனார். ஆதலால்,

எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்.

27. அறிவுள்ளவன் பெருமை.

[உருத்திர சன்மன் சரிதம்.]

1. முற்காலத்தில் தக்க கல்விமான் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நற்கீரர். அருமையான நூல் ஒன்று அவர் செய்திருந்தார். அதன் பெயர் 'அகப்பொருள்'

2. மதுரையில் பாண்டியர் ஆண்டு வந்தார்கள். அவர்கள் காலத்தில் அங்கே சங்கம் ஒன்று இருந்தது. ஒரு காலத்தில் அதில் நாற்பத்தொன்பது வித்வான்கள் இருந்தார்கள். 'அகப்பொருளுக்கு உரை எழுதவேண்டும்' என்று பாண்டியன் அபிப்பிராயம் கொண்டான். மேலே கண்ட வித்வான்கள் எழுதினார்கள். கருத்து ஒத்திருக்க இல்லை.

3. நூல் எழுதினவர் கருத்து இன்னது என்பது அரசன் அறிய முடியவில்லை. செய்வது இன்னது என்று விளங்கவில்லை. அப்படிப்பட்ட காலங்களில் கடவுளை அரசர்கள் கேட்பார்கள். அது முற்கால வழக்கம். கடவுளும் வழிகாட்டுவார். பாண்டியன் அந்த வழக்கத்தை அநுசரித்தான். கடவுளுக்கு அவன் வழிபாடு செய்தான். போற்றினான்; மனம் ஒத்து வேண்டினான். கனவில் கடவுள் தோன்றினார். "பாண்டிய! இந்த நகரத்தில் சிறுவன் ஒருவன் இருக்கிறான். தாழ்ந்த குலத்தில் அவன் பிறந்தவன். அன்றியும் ஏழை; ஊமையன். அவ்வாறு இருந்தாலும் அவன் அறிவு உடையவன். சங்கத்துக்கு அவனை வரவழை. பலகை அவனுக்கும் இடம் கொடுக்கும். ஒவ்வொரு வித்வானும் தன் உரையை வாசிக்கட்டும். எதன் கருத்து சரியோ, அதை வாசிக்கும்பொழுது அவன் தன் தலையை அசைப்பான். அவன் கண்களிலிருந்தும் நீர் பெரு

கும். அந்த உரைதான் ஏற்றுக்கொள்ளும்படியான உரை. இழிகுலமென்று யோசிக்கவேண்டாம். ஏழை என்று பின் வாங்க வேண்டாம். சிறுவன் என்று பார்க்கவேண்டாம். ஊமையன் என்று அவமதிக்கவேண்டாம். அவன் அறிவு உடையவன். அவன் பெயர் உருத்திர சன்மன்" என்றார். அவன் இருக்கும் வீதியையும் வீட்டையும் கூறினார். அரசன் அவ்வாறே செய்தான். பலகை அவனுக்கு இடங் கொடுத்தது. அவன் அதில் உட்கார்ந்தான். எல்லோரும் தங்கள் தங்கள் உரையை வாசித்தார்கள். ஒன்றுக்கும் அவன் தலை அசைக்கவில்லை. பின் ஒருவர் அவர் உரையை வாசித்தார். அதைக்கேட்ட அவன் தன் தலையை அசைத்தான். ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று 'அவ்வுரையே சரி என்று சபையோர்கள் தீர்மானித்தார்கள். கடவுளும் அரசனும் அவனை மதித்தார்கள். ஆதலால்,

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

முற்றிற்று.

ஜில்லா பூகோள வர்க்கம்.

இவைபசுமலைஉயர்தர பாடசாலைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ரெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்களால் துரைத்தனத்தார் ஏற்படுத்திய புதிய விதிகளை அனுசரித்து எழுதப்பெற்று, தமிழ்நாடு முழுதும் பாராட்டப்பட்டுவருகின்றன.

மதுரை ஜில்லா பூகோள சாஸ்திரம்	0—5—0
இராமநாதபுரம் ஜில்லா ஷை	0—5—0
திருநெல்வேலி ஜில்லா ஷை	0—5—0
திரிச்சிராப்பள்ளி ஜில்லா ஷை	0—5—0
தஞ்சாவூர் ஜில்லா ஷை	0—5—0
சேலம் ஜில்லா ஷை	0—5—0
கோயம்புத்தூர் ஜில்லா ஷை	0—5—0
வட ஆற்காடு ஜில்லா ஷை	0—5—0
தென் ஆற்காடு ஜில்லா ஷை	0—5—0

இவற்றுள் அந்தந்த ஜில்லாக்களின் சரித்திரமும் பொதுவாய் அரசியலும் சுருக்கமாக எழுதிச்சேர்க்கப்பெற்றுள்ளன.

இதர ஜில்லாக்களின் பூகோளம் விரைவில் வெளிவரும்.

உபபாடமாக வைக்கத்தகுந்த புத்தகங்கள்.

கதையும் பாட்டும் 1, 2 பாகங்கள் தனித்தனி	0—3—0
இராணி மங்கம்மாள சரித்திரம்	0—1—0
திருமலைநாயக்கர் சரித்திரம்	0—2—0
ஷை பெரியபுத்தகம்	0—10—0
கிருஷ்ணன் தூது	0—2—0
பெரியார் பெருமை	0—3—0
கண்ணன் பாலலீலை	0—6—0
இராமாயண சாரசங்கிரகம்	0—6—0
பாரத சாரசங்கிரகம்	0—6—0
பாகவத சாரசங்கிரகம்	0—10—0
விராடநகரத்தின் ரகசியம்	0—12—0
விநோதக்கதைகள்	0—10—0
மாணவர் நீதிக்கதைகள்	0—6—0
நல்லொழுக்க போதம்	0—6—0

மதுரை, புத்தகவியாபாரம்

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் வெளியிட்ட

தமிழ்ப் புத்தகங்கள்.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றன.

புதிய பாடப் புத்தகங்கள்:—இவை *துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனுமுறைக் கிணங்க சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம்,* இலக்கணம், *தேகதத்துவம், பிராணிசாஸ்திரம், தாவரசாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும், சிறந்த தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளன.*

புதிய முதல் பாடம்	0—2—0
புதிய இரண்டாம் பாடம்	0—3—0
புதிய மூன்றும் பாடம்	0—3—6
புதிய நான்காம் பாடம்	0—4—6
புதிய ஐந்தாம் பாடம்	0—6—0

நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

உலகநீதி	நீதிவாக்கியக் கதைகள்	0—2—0
ஆத்திசூடி	நீதிவாக்கியக் கதைகள்	0—2—0
கொன்றைவேந்தன்	நீதிவாக்கியக் கதைகள்	0—2—0
வெற்றிவேற்கை	நீதிவாக்கியக் கதைகள்	0—3—0
மூதுரை	நீதிவாக்கியக் கதைகள்	0—5—0
நல்வழி	நீதிவாக்கியக் கதைகள்	0-10—0

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கியங்களை மாணுக்கர்கள் நெட்டுருக்கொண்டு பதவுரை, கருத்துரை, களை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதியாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங் கொண்டு, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத்தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கன்மேல்பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறுஎழுதப் பெற்றுள்ளன. நல்லொழுக்கப் போதத்திற்கும் இவைநற்றுணையாகும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். காம் போவிஷன்என்னும்பாஷாஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.